Registered as a Newspaper

பக்கங்கள் - 16
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 325

புதன்கிழமை
16 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



“மொந்தை மட்டும் தான் புதிசு கள்ளுப் பழசுதான் கண்டியளோ”



மனித உரிமை மீறல்கள் தொடர்பில்

# உள்ளகப் பொறிமுறையே அநுர அரசாங்கத்தின் முடிவு

அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்

**கொழும்பு, ஒக்ரோபர் 16**

**நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு எதிராக உள்ளகப் பொறிமுறை ஊடாகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

15

## தாய்மாருடன் தடுப்பிலுள்ள சிறார்களுக்கு உளத்தாக்கம்

கொழும்பு, ஒக். 16

சிறைச்சாலைகளில் தாய்மாருடன் சேர்த்து தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லை என சிறைச்

15



ஆயுதமுனையில்

## ஆட்சியைக் கவிழ்க்க முயன்றோரிடம் நாடு!

ஜனநாயகம் தொடர்பில் சிந்தியுங்கள் மக்களிடம் மத்தும பண்டார கோரிக்கை

கொழும்பு, ஒக். 16

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரு தடவைகள் ஆயுதம் ஏந்தியவர்கள்தான் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளனர். எனவே, நாட்டு மக்கள் பொதுத்தேர்தலின்போது ஜனநாயகம் தொடர்பில் சிந்திக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்

15

## வாகன இறக்குமதிக்கு நடைமுறை இறுக்கம்!

கொழும்பு, ஒக். 16

வாகன இறக்குமதி தொடர்பாக இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். டொலர் கையிருப்பு, அந்நியச் செலாவணி இருப்பு என்பவற்றை வைத்தே வாகன இறக்குமதி பற்றித் தீர்மானிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். எமது அரசாங்கம் பதவியேற்ற பின்னர் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)



## ரூ.8,000,000 மோசடி; சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 16

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி 80 இலட்சம் ரூபாவை மோசடி செய்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, மல்லாவிப் பகுதியைச் சேர்ந்த அந்தச் சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

15

இந்தியா - இலங்கை

## ரயில்பாதை இணைப்பு திட்டம் குறித்து ஆராய்வு!

கொழும்பு, ஒக். 16

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஐந்து பில்லியன் டொலர் செலவில், நெடுஞ்சாலை மற்றும் ரயில் பாதை இணைப்புத் திட்டம் குறித்து மீண்டும் ஆராயப்படுவதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார். இதற்கான செலவை இந்தியாவே பொறுப்பேற்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை

15

## பொலிஸாரின் வீட்டில் திருடியவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணம் - நவாலி பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றைத் திருடிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் திருட்டு இடம்பெற்றிருந்தது. மானிப்பாய் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்றையதினம் சந்தேகநபரைக் கைது செய்தனர். திருடப்பட்ட நகைகளில் குறிப்பிட்டளவு நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

15



## மானிப்பாய் பகுதியில் வீடு மீது தாக்குதல்!

மோ.சைக்கிள், உடைமைகள் எரிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணம், மானிப்பாயில் அமைந்துள்ள வீடொன்றின் மீது தாக்குதல் மேற்கொண்டு வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் சேதப்படுத்தப்பட்

15



## இலங்கை - இந்திய உறவு என்றும் நிரந்தரம்

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 16

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு என்றும் பிரிக்கப்பட முடியாதது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பட்டயக் கணக்காளர்கள் சங்கத்தின் நிகழ்வில்

15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பொதுத்தேர்தல் முடிந்தவுடன் உள்ளூராட்சிசபைத் தேர்தல்

*அரசாங்கம் அறிவிப்பு*

கொழும்பு, ஒக். 16

**பொதுத்தேர்தல் முடிந்த பின்னர் 2025 ஆரம்பத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு அறிவித்துள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் நாமும் நீதிமன்றத்தை நாடி இருந்தோம். எனவே, பொதுத் தேர்தல் முடிந்ததும் 2025 ஆரம்பத்தில் தேர்தல் நடத்தப்படும்.

இதற்கான நிதி ஒதுக்கப்படவேண்டும். அவ்வாறு ஒதுக்கப்பட்டு உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பு மனுக்களை இரத்துச் செய்வது தொடர்பில் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது. நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் அனைத்து கட்சிகளினதும் இணக்கம் அவசியம் - என்றார். (ச-44)

## ஊழலை விசாரிப்பதற்கு முதுகெலும்பு அவசியம்

*கஜேந்திரகுமார் சவால்*



யாழ்ப்பாணம், ஒக். 16

அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இருந்தால் வடக்கு - கிழக்கில் ஊழல் சம்பந்தப்பட்ட விசாரணையை ஆரம்பியுங்கள் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சவால் விட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்திக்கு ஒரு தேவை இருக்கின்றது. தாங்கள் ஏனைய அரசாங்கங்களைவிட வித்தியாசமானவர்கள் என்பதைக் காட்டவேண்டும் என்பதே. இந்த ஒரு விடயத்தில் மட்டும் தான் அவர்கள் மனம் விரும்பிச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. வடக்கு - கிழக்கில் ஊழல் விசாரணையை செய்வதன் ஊடாக பல தரப்புகளும் சிக்கிக்கொள்ளக்கூடும். ஊழல் விசாரணைக்கு ஒத்துழைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஆகவே உங்களுக்கு முதுகெலும்பு இருந்தால் வடக்கு- கிழக்கில் ஊழல் சம்பந்தப்பட்ட விசாரணையை ஆரம்பியுங்கள் - என்றார். (ச-100)



## 6 ஆசனங்களை கைப்பற்றுவோம்

*அர்ச்சுனா நம்பிக்கை*

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களையும் நாங்கள் பெற்றுக் கொள்வோம். ஒரு விளையாட்டு வீரனாகத் தோல்வியையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் எனக்கு உண்டு என்று சுயேச்சையாக களமிறங்கியுள்ள முதன்மை வேட்பாளர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய அரசியல் பயணம் ஏழைகளுக்கான அரசியல் பயணமாக இருக்கும். மக்களின் தேவைக்காக ஆளுமைமிக்கவர்களை ஒன்றிணைத்து , பாதை மாறிப் போகும் தமிழ்த் தேசியத்தை சரியான பாதைக்கு கொண்டுவருவோம்.

சமூகப் பொறுப்புள்ள துடிப்புள்ள இளையோரை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்லவேண்டும். எனவே தமிழ்மக்கள் மிகச் சிந்தித்து வாக்களிக்கவேண்டும். எனக்கு 10 கோடி ரூபா பெறுமதியான சொத்துள்ளது. மக்களிடம் பணம் பெற்றால் அது தொடர்பில் வெளிப்படைத் தன்மையாகச் செயற்படுவோம் - என்றார். (ச-26)

## பொதுத்தேர்தலின் பின்பே அநுர இந்தியா பயணம்

*வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 16

பொதுத்தேர்தல் முடிவடைந்து புதிய அரசாங்கம் அமையபெற்ற பின்னரே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்தியப் பயணம் இடம்பெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், வெளிவிவகார அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ரஷ்யாவில் நடைபெறும் 'பிரிக்ஸ்' உச்சி மாநாட்டுக்கு வருகை தருமாறு ரஷ்ய ஜனாதிபதி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அழைப்பு விடுத்தார். எனினும், சிறிய அமைச்சரவை மற்றும் தேர்தல் காலம் என்பதால் அதில் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார். வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவொன்று பங்கேற்கும். இந்திய வெளிவிவகார அமைச்சரும், இந்தியா வருமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தேர்தல் முடிவடைந்து புதிய அரசாங்கம் அமையபெற்ற பின்னரே இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறும் - என்றார். (ச-44)

## அன்னத்தில் சிலிண்டர்!

கொழும்பு, ஒக். 16

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டணிக் கட்சியான தேசிய ஜனநாயக முன்னணி அன்னம் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியே அன்னம் சின்னத்துக்குத் தாவியுள்ளது.

அதேவேளை பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் தமது சின்னத்தை மாற்றுவதற்கு அரசமைப்பில் இடமுள்ளது என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-6)

## வேட்பாளர்களுக்கு விருப்பு எண்கள்

கொழும்பு, ஒக். 16

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு எண்கள் இன்று வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை அனைத்து மாவட்டங்களின் விருப்பு எண்களையும் தேர்தல் ஆணைக்குழு பெற்றுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். விருப்பு எண்களை ஆய்வு செய்த பின், குறித்த ஆவணங்கள் மீண்டும் மாவட்ட செயலாளர்களிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## ரணில் விசேட உரை

யாழ்ப்பாணம், ஒக். 16

முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நாளை வியாழக்கிழமை விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.


இதன்போது, நாட்டின் தற்போதைய அரசியல் நடத்தை மற்றும் எதிர்காலத் திட்டங்களை குறித்து ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்றுறை உற்பத்தி இவ்வாண்டில் வளர்ச்சி

கொழும்பு, ஒக். 16

**கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நாட்டின் தொழிற்றுறை உற்பத்திக் குறியீடு 1.2 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளது.**



இந்த ஆண்டு ஓகஸ்டில் 91.3 ஆக உயர்ந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில், உணவு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில், ஓகஸ்ட் மாதத்தில் நாட்டின் உத்தியோகபூர்வ வறுமைக் கோடு சற்றுக் குறைந்துள்ளது. ஜூலை மாதத்தில் 16,373 ரூபாவாக இருந்த வறுமைக் கோடு ஓகஸ்ட் மாதத்தில் 16,152 ரூபாவாக குறைந்துள்ளதாகவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் கூறியுள்ளது. (ச-இ)

## ஓய்வூதியர்களுக்கு நவம்பரில் 3,000/=

கொழும்பு, ஒக். 16

அடுத்த மாதம் முதல் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுடன் 3,000 ரூபா சேர்க்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொகையை ஒக்ரோபர் மாதத்துக்கான இடைக்காலக் கொடுப்பனவாக வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந்த மாதத்துக்கான மேலதிக கொடுப்பனவை எதிர்வரும் நாட்களில் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ச-சி,6)

## பல்கலை மானிய ஆணைக்குழு உறுப்பினர்கள் விலகல்

கொழும்பு, ஒக். 16

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் ஆணைக்குழுவில் தங்கள் பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

அவர்கள் தமது பதவி விலகல் கடிதங்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதிக்கு கையளித்துள்ளனர்.

அதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, அதன் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி. உடவத்த மற்றும் உறுப்பினர்களே தங்கள் பதவி விலகல் கடிதங்களை எழுத்து மூலம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கையளித்துள்ளனர்.

அதேவேளை 2020 இல் நியமிக்கப்பட்ட தற்போதைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடைய இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஏற்றுமதி சபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஒக். 16

இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிறவுண் அண்ட் கொம்பனி பி.எல்.சி. இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி மங்கள விஜேசிங்க இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ச)



## 6 மாத காலத்துக்கு எரிபொருள் மானியம்

யாழ்ப்பாணம், ஒக். 16

மீனவ சமூகங்களுக்கு ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விசேட எரிபொருள் சலுகையை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அனுமதித்தது.

அடுத்த 6 மாத காலத்துக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும். நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடித் தொழிலில் ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைத்து மீன்பிடித் தொழிலை மீட்டெடுப்பது தொடர்பில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (ச-சி,6)

## டொலருக்குப் பாதிப்பின்றி வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, ஒக். 16

நாட்டில் மீண்டும் டொலர் நெருக்கடி ஏற்படாத வகையில், வாகன இறக்குமதிக்கு அனுமதிப்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எந்தவொரு வகையிலும் கட்டணச் சலுகைகளுடன் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது.

வாகன இறக்குமதியை ஒரு சரியான முறைக்கு உட்பட்டு, நாட்டில் மீண்டும் டொலர் நெருக்கடி ஏற்படாத வகையில், எமது டொலர் தொகை வெளியேறாத வகையில், வாகனங்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் வாகன இறக்குமதிக்கு அனுமதிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-சி)




'கடமையைச் செய், பலனை எதிர்பாராதே' எண்டு கீதா உபதேசத்தில கண்ணன் சொன்னதை எங்கட ஆக்கள் பிழையா விளங்கிக்கொண்டு, பலனேயில்லாமல் கடமைக்கு வேலை செய்தால் சரி எண்ட மெண்டாலிட்டியோட இருக்கினம். அதிலையும் அரசாங்க உத்தியோகக்காரர் 'கடமைக்கு' வேலை செய்யிறதில பேர்போனவை. நீட்டி முழக்காமல் விசயத்துக்கு வருவம். மானிப்பாய் மெமோறியல் பள்ளிக்கூடத்தடியால சங்குவேலிக்குப் போற றோட்டில போய் வந்தவைக்கு அந்த றோட்டின்ர விறுத்தம் தெரிஞ்சிருக்கும். காட்டுப்பாதைக்குள்ளால கூட போய் வந்திடலாம், ஆனால் உந்த றோட்டால வாகனங்கள் போய்வாறது பெரும்பாடு. எங்க திரும்பினாலும் பள்ளமும், திட்டியும் தான். அதால போய் வாறவை றோட்டை ஒழுங்காப் போடாத பிரதேசசபைக்காரரை திட்டித் தீர்க்காமல் விட்டதில்லை.

கோடை காலத்திலயே ஆக்கள் போய்வரக் கஷ்டப்படுற அந்த றோட், மாரிகாலத்தில எப்பிடி சேறும் சுரியுமா மாறி நிக்கும் எண்டு சொல்லத் தேவையில்லை. எப்பிடியும் ஒவ்வொருநாளும் நாலைஞ்சுபேராவது அந்த றோட்டில விழுந்தெழும்பாமல் போனால் அது அதிசயம் தான். அப்பிடியான றோட்டை மாரி தொடங்கமுதல் திருத்தித்தரச் சொல்லி அந்த றோட்டில குடியிருக்கிறவை எழுதாத கடிதமில்லை, ஏறி இறங்காத இடமில்லை. மேலிடத்தால பிரசர் வந்தபிறகுதான் பிரதேசசபைக்காரர் கொஞ்சம் கண்ணைத் திறந்து "இந்த றோட்டைத்திருத்த வேணும்" எண்டு 'கடமைக்காக' முடிவெடுத்தவை. "றோட்டைத் திருத்தத்தானே கேட்டனியள்? பொறுங்கோ செய்யிறம் வேலை" எண்டு மனதுக்க கறுவிக்கொண்டு, எங்கையோ இருந்து கட்டட இடிபாடுகள், கல்லுகள் எல்லாத்தையும் கொண்டந்து நடு றோட்டில கொட்டிச்சினம். சரி, இனி அதுகளை தட்டிப்பரவி, மேலால மண்ணோ, தாரோ போட்டு கொஞ்சமெண்டாலும் போய்வரக் கூடிய மாதிரிச்செய்யப்போகினம் எண்டு தான் சனம் நினைச்சது.

ஆனால் நடுறோட்டில கொட்டின கல்லும், கட்டட இடிபாடுகளும் நாள்கணக்கில அங்கேயே இருந்திருக்குது. முந்தியெண்டாலும் பள்ளத்துக்க வெள்ளம் நிண்டால் கரையால எண்டாலும் வெட்டிக் கிட்டி கஷ்டப்பட்டு போகக்கூடியதா இருந்தது. ஆனா இப்ப உந்தக் கல்லுக்குவியலை நடுறோட்டில கொட்டினதால, சனங்கள் கரையாலையும் போகமுடியாமல் பெரும் கரைச்சல்பட்டுப் போட்டுதுகள். பிறகு உதையும் போட்டோ எடுத்து பிரதேசசபைக்கு கடிதம் அனுப்பினால், அவை ஒரு பதிலுமில்லையாம். அதுக்குப் பிறகு மேலிடத்துக்கு அறிவிச்சபிறகுதான் பிரதேசசபைக்காரர் 'ஜே.சி.பி.',மிசினில வந்து "வந்தம் செய்தம் சென்றம்" எண்டு ஒப்புக்காக ஏதோ தட்டிப் பரவிப்போட்டு,பெரிய கல்லுகளை றோட்சைட்டில அப்பிடியே போட்டிட்டு போட்டினம். இரவில ஆரும் வாறவை உந்தக் கல்லுகளில மோதுப்படேக்கதான் அவைக்கு தாங்கள் செய்த பிழை உறைக்கும் போல. பேசாமல் ஒரு றோலரைக் கொண்டந்து கல்லுக்குவியலை அமத்தி விட்டால் பாதையும் சீராகி இருக்கும், வேலையும் முடிஞ்சிருக்குமே. கடமைக்காக வேலை செய்தால் இப்பிடி உருப்படியில்லாத காரியங்கள்தான் நடக்கும் போல.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மானம்பு உற்சவமும் வாணி விழாவும்

யாழ்ப்பாணம், ஒக்.16

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்துமன்றத்தின் ஏற்பாட்டில் மானம்பு உற்சவமும் வாணி விழாவும், கலாசாலையில் விஜயதசமி நன்னாளான கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கலாசாலை வளாகத்தில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விஜயதசமிப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கலாசாலை முதல்வர் ச.லலீசன் சிறார்களுக்கு ஏடு தொடக்கி வைத்தார். நிகழ்வில் சைவப்புலவர் க.கைலநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-25,66)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.16

'பொருளாதார நெருக்கடியும் சர்வதேச அழுத்தங்களும் மாற்றத்துக்கான மக்களின் அவாவும்' என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டக் கலந்துரையாடல் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. கலந்துரையாடலின் தொடக்கவுரையை சொ.சிவபாலனும், கருத்துரையை யாழ்.பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பொருளாதார ஆய்வாளருமான கலாநிதி அகிலன் கதிர்காமரும் ஆற்றவுள்ளனர். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. உடல்நலனில் கவனம் செலுத்தவும். பணிச் சுமை குறையும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**கடகம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். குடும்பப் பொறுப்புகளை உற்சாகமாக நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே நடைபெறும். உங்கள் முயற்சிகளுக்கு பங்குதாரர்களின் ஆதரவு கிடைக்கும். விநாயகரை வழிபட மன மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமாகப் பேசி மகிழ்வீர்கள். காரியங்களில் சிறு சிறு தடைகள் உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**மீனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. காரியம் சாதகமாக முடியும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

# புற்றுநோய் விழிப்புணர்வு பேரணியும் கருத்தமர்வும்

கிளிநொச்சி, ஒக்.16

பளைப் பிரதேச மருத்துவமனை, பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, பளைப் பிரதேச செயலகம் மற்றும் பிரதேசசபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் கர்ப்பப்பை மற்றும் கழுத்துப் புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வுப் பேரணி பளைப் பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி, பளைப் பிரதேசசெயலகம் வரை நடைபெறும்.

அங்கு புற்றுநோய் தொடர்பான கருத்தமர்வும் இடம்பெறவுள்ளது. அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25, 66)

# 'தேர்தலை எதிர்கொள்ளல்' பகிரங்கக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 16

'எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றோம்?' என்ற தலைப்பிலான பகிரங்கக் கலந்துரையாடல் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தொல்புரம் மேற்கு, சுழிபுரத்திலுள்ள கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலில் சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு நூலகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியமும் 2019 ஆண்டு உயர்தர மாணவர்களும் இணைந்து நடத்துகின்ற வருடாந்த குருதிக்கொடை முகாம் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-63)

# யாழ். பல்கலைக்கழகத்தில், மாற்றுவலுவுள்ளோருக்கு செயற்கை அவயவங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.16

செயற்கை அவயவங்களை குறிப்பாக கை மற்றும் கால் போன்றவற்றை முப்பரிமாண வடிவில் உருவாக்கி அவயவங்களை இழந்தவர்களுக்கு வழங்கும் பொருட்டு யாழ்.பல்கலைக்கழக பொறியியல் பீடம் மற்றும் கனடா பவுன்ட் போ லோக்கல் ன்டைவேஸ், கனடா சிறீலங்கன் கொன்வென்சன் ஆகியன இணைந்து மேற்கொள்ளும் திட்டத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீட கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பொறியியல் பீடாதிபதி பேராசிரியர் ஏ.கனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான கனேடியத்தூதுவர் எறிக் வோல்ஸ், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறீசற்குணராஜா, பேராசிரியர் பிரேமா அரசு, பேராசிரியர் கே.செல்வகுமார், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மாற்றுவலுவுள்ளோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25,113)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.16


யாழ்.நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிர வார கந்தபுராண சொற்பொழிவுத் தொடர் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், ஆலய சண்முக விலாசமண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருவான சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் ஆசியுரையையும் பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும் ஆற்றுவர். 'கந்தபுராணமும் கச்சியப்பரும்' என்னும் விடயப் பொருளில் இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் நித்திய பாபுரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உளநல தினத்தையொட்டி விழிப்புணர்வு ஊர்வலம்

மன்னார், ஒக்.16

சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையின் பிராந்திய உளநலப் பிரிவு மற்றும் மன்னார் பொது மருத்துவமனையின் ஏற்பாட்டில் 'உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் இருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்' எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டத்தில் உளநலம் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது உளநலம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (ச-25, 56)



# பேருந்து சேவை

யாழ்ப்பாணம், ஒக்.16

போக்குவரத்துக்குச் சிரமப்படும் மாணவர்களின் நலன் கருதி மண்டான், அண்ணாசிலை, செல்வாபுரம் வழியாக மேற்படி பாடசாலை வரையான இலவச பஸ் சேவை கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்.கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் அனுசரணையுடன் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-25,66)

கிளிநொச்சி கோணாவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு வாழ்வாதார உதவியாக விவசாயத் தேவைக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் புதிய ஆழ்துளை கிணறு ஒன்று அமைத்து அண்மையில் கையளிக்கப்பட்டது. (ச-66)





# முக்கொம்பன் ம.வி.மாணவர் மாகாண மட்டத்துக்குத் தெரிவு

கிளிநொச்சி, ஒக்.16

வலய மட்ட விவசாய வினாடி வினாப் போட்டியில் கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவர்கள் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தப் போட்டி கிளிநொச்சி தெற்கு வலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

போட்டியில் சயூரா 1 ஆம், தகவரசன் 2 ஆம், நிகரிலான் 3 ஆம், தமிழினி 4 ஆம் இடங்களைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-25,13)




எழுதுமட்டுவாழ் வடக்கு அ. த. க.பாடசாலையில் சரஸ்வதி சிலை அமைப்பதற்கான அடிக்கல் நடுகை செய்யும் நிகழ்வு பாடசாலை முன்றலில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.அதிபர் சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் அடிக்கல்லை நாட்டி வைத்தார். (ச-25,9)



வலி.தெற்குப் பிரதேசசபையின் உடுவில் உபஅலுவலக எல்லைக்குட்பட்ட மருதனார்மடம் பொதுச்சந்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டட வேலைத் திட்டங்களை, உலக வங்கியினர், வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் கடந்த புதன்கிழமை நேரில் பார்வையிட்டுத் தரவுகளைப் பெற்றுக்கொண்டனர். (ச-25,66)

# மதிப்பளிப்பு



கிளிநொச்சி, ஒக்.16

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் தரம் - 11 இல் கல்வி கற்கும் மாணவி சி.காருஷா மாகாண மட்ட ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்று தேசியப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். குறித்த மாணவி பாடசாலை சமூகத்தினரால் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டார். (ச-25,13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வனவளத் திணைக்களத்தால் பூர்வீகக் காணிகள் ஆக்கிரமிப்பு

## மன்னாரில் மக்கள் போராட்டம்

**மன்னார், ஒக். 16**

**மன்னார், மழுவராயன் கட்டையடம்பன் பகுதியில் வனவளத் திணைக்களம் கையகப்படுத்தி வைத்துள்ள தங்களின் பூர்வீகக் காணியை விடுவிக்குமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் நேற்று மடு பிரதேச செயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

கடந்த 1997 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் 2004 ஆம் ஆண்டு மீள்குடியமர்த்தப்பட்டோம்.

அங்கு கச்சான், பயறு போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த நிலையில், கடந்த 2015 ஆம் ஆண்டு வனவளத் திணைக்களத்தினர் தங்களுக்குச் சொந்தமான இடம் எனக் கூறி அங்கு சிறுதானிய பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட இருவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியிருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த பகுதியை வன வளத் திணைக்களத்தினர் கல் போட்டு தங்களின் பிரதேசமாக மாற்றிக்கொண்டுள்ளனர். இதனால் தமது வாழ்வாதாரம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றது என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ச-27)



# கவனிப்பாரற்ற நிலையில் வவு.பொது மைதானம்

வவுனியா, ஒக்.16

வவுனியா நகரசபை விளையாட்டு மைதானம் பயன்படுத்தமுடியாத நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மைதானத்தில் மண் சீரான முறையில் பரவப்படாமையால் மழை நேரங்களில் சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. இதனால் விளையாட்டுப் பயிற்சி, உடற் பயிற்சிகளில் ஈடுபடுபவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் மைதானத்தின் சில பகுதிகளில் புற்கள் நிறைந்திருப்பதால் அதில் விசப் பாம்புகளும் உலாவித்திரிகின்றன. மைதானத்தில் ஓய்வு எடுப்பதற்கான இருப்பிடங்கள் உடைந்த நிலையில் உள்ளன.

கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதனால் மைதானம் மேலும் அசுத்தமடைகிறது. இதனால் அநேகமானோர் அங்கு செல்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

எனவே, இது தொடர்பில் நகரசபை கவனம் செலுத்தி மக்களுக்கான சேவையை சிறப்பாக வழங்கவேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25,18)

# சுகாதாரக்கேடு பாற்சாலைக்குச் 'சீல்' ரூ. 1 இலட்சம் தண்டம்

யாழ்ப்பாணம், ஒக். 16

கே.கே.எஸ். வீதியில் சுகாதாரச் சீட்கேட்டுடன் இயங்கிய பால்சாலையொன்று இனங்காணப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டதுடன் 'சீல்' வைத்தும் மூடப்பட்டுள்ளது.

கோண்டாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.ஜெகானந்தன் தலைமையிலான குழுவினரால் அண்மையில் கடைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்களைக் கவனத்திற்கொள்ளாது குறித்த பால்சாலை தொடர்ந்தும் சுகாதாரச் சீர்கேடாக இயங்கியமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து க.ஜெகானந்தனால் குறித்த பாற்சாலை உரிமையாளருக்கு எதிராக நேற்றுமுன்தினம் யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த மேலதிக நீதிவான் செ.லெனின்குமார் ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதித்ததுடன், பாற்சாலையை 'சீல்' வைத்து மூடுமாறும் கட்டளை வழங்கினார். (ச-26)

# சமுர்த்தி வங்கிச் செயற்பாடு; யாழ்.மாவட்டம் முதலிடம்


கொழும்பு, ஒக்.16

சமுர்த்தி வங்கிச் செயற்பாடுகளில் தேசிய அளவில் யாழ்.மாவட்டம் தற்போது முன்னணி வகிக்கிறது. இதற்குச் சமுர்த்தி சார்ந்த அலுவலர்களின் ஒத்துழைப்பே காரணம் என்று யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிகளின் கணக்காய்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 33 சமுர்த்தி வங்கிகள் இயங்கி வருகின்றன. சமுர்த்தி வேலைத் திட்டத்திலிருந்து நிவாரண வழங்கல் விடுவிக்கப்பட்டு நலன்புரி நன்மைகள் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மக்களின் வறுமையைக் குறைத்து அவர்களின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்குச் சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் மேன்மேலும் வினைத்திறனாகச் செயற்படவேண்டும் - என்றார். (ச-66,27)



# தமிழரின் சுயாட்சிக்கு ஹோம வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 16

தமிழ்மக்கள் சுயாட்சி பெற்று மகிழ்வோடு வாழவேண்டி யாழ்ப்பாணம், கந்தர்மடம் இந்துசமயப் பேரவை வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானுக்குச் சிறப்புக் ஹோம வழிபாடு நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

போரில் உயிர் நீத்தவர்களுக்குச் சிறப்புத் தர்ப்பணம் நடைபெற்றுப் பின்னர் உயிர் நீத்தவர்களுக்காக ஹோமசாந்தியும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மஹாலட்சுமி ஹோமம் மற்றும் வேற்பெருமானுக்குச் சர்வசத்ரு சங்கார ஹோமம் என்பன சிவாச்சாரியார்களால் நிகழ்த்தப்பட்டன. (ச-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.16

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 27 சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது. இளஞ்சைவப்புலவர் , பிரசங்கச்சுடர் த. மனோஜ்குமார் 'மாணிக்கவாசகரும் புணர்ச்சிப் பத்தும்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

# கந்தபுராண விழா 2ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 16

வடமராட்சி மண்ணில் மாபெரும் கந்தபுராண விழா இரண்டாம் நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு துன்னாலை அல்லையம்பதி வடிவேலவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை உதவி மாவட்டச் செயலர் கலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை பசுபதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கலாநிதி சைவப்புலவர் ஏரம்பமூர்த்தி அனுசாந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அவர்களின் பாதையில் இவர்களும்...?

இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற முழக்கத்துடன் ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி - அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளில் இருந்து தளம்புகின்றதோ என்ற சந்தேகம் எழ ஆரம்பித்திருக்கின்றது. அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் மாற்றத்துக்கான முன்னெடுப்புகள் அதிகாரம் கிடைத்தவுடன் முடுக்கிவிடப்படும் என்று தெரிவித்திருந்த அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்தவுடன் சற்று அடக்கி வாசிக்க ஆரம்பித்திருக்கின்றார் என்றே தோன்றுகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை தவறாக முகாமைத்துவம் செய்த ராஜபக்ச சகோதரர்களுக்கு எதிராக நாடு கிளர்ந்தெழுந்தபோது பிரதான தொனியாக இருந்தது. அதன்பின்னர் அதிகாரத்துக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க மக்கள் எதிர்பார்த்ததை ஏற்படுத்தத் தவறியதன் விளைவை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அனுபவித்தார். மக்களின் எதிர்பார்ப்புகளை புறந்தள்ளி, அரசியல் நோக்கங்களுக்காக தவறிழைத்தவர்களைக் காப்பாற்ற அல்லது கண்டு கொள்ளாது விட்ட ரணில் விக்கிரமசிங்கவின் போக்கே, அவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் எதிர்பாராத தோல்வியைக் கொடுத்தது.

ஊழலை ஒழித்து ஆட்சி முறைமையை துப்புரவாக்குவோம் என்றும், பொதுவாழ்வில் நேர்மையை உறுதி செய்வோம் என்று அநுரகுமார திஸாநாயக்க அளித்த வாக்குறுதிகளால் உந்தப்பட்ட மக்கள் கடந்த தேர்தலில் அவருக்கு வாக்களித்திருக்கின்றார்கள். நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்களையும், கடந்த காலங்களில் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களையும் தண்டனைக்குள்ளாக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனே மக்கள் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கின்றனர். ஆனால் மக்கள் எதிர்பார்த்த விரைவான மாற்றம் எதுவும் தென்படுவதாக இல்லை.எதிர்வரும் பொதுத்தேர்தலுக்காக, நாட்டின் வழமையான அரசியலையே அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் முன்னெடுக்கின்றதா என்ற சந்தேகம் மெல்ல இப்போது எழுந்திருக்கின்றது. ஆட்சி அதிகாரத்துக்காக ஊழல்வாதிகள், மோசடியாளர்கள் மீது மென்மையான போக்கை அநுரகுமார திஸாநாயக்க கைக்கொள்கின்றாரா என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது. பதவியேற்றபின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தன்னுடைய கையில் மந்திரக்கோல் இல்லை என்று கூறியிருந்தார். அது உண்மை என்றபோதும், கடந்த காலத் தவறுகளுக்கான காரணகர்த்தாக்கள் மீது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் சற்றுத் தயக்கம் காட்டுகின்றது என்றே கருதவேண்டியிருக்கின்றது.

அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய புதிய அரசாங்கம், காலிமுகத் திடலில் கண்காட்சி போல அடுக்கி மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அவை தொடர்பில் இப்போது எதுவும் பேசப்படுவதில்லை. அதைப்போன்று தினமும் விசாரணைகள், விசாரணைக் குழுக்கள் என்று அரசாங்கத்திடம் இருந்து அறிக்கைகள் வெளிவந்துகொண்டிருந்தாலும், செயல்வடிவில் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. மக்களை ஒரு பரபரப்பு கிளர்ச்சி நிலையில் வைத்து, நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்ளவே அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முயல்வதாகத் தெரிகின்றது.கடந்த காலங்களிலும் நாட்டில் இதுவே நடந்தது. இவ்வாறான அரசியலால் சலிப்படைந்தே மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்து அநுரகுமார திஸாநாயக்கவை ஆட்சிக் கதிரைக்குக் கொண்டு வந்திருந்தனர். அநுரகுமார திஸாநாயக்க மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கான முதலடியை எடுத்து வைக்க வேண்டும். சொந்த - கட்சி அரசியலுக்கு அப்பால் சிந்தித்துச் செயற்படவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் நாட்டு மக்கள் அவர்கள் பின்னால் தாமாகவே திரளுவர். ஆனால் மக்களைத் திரட்டுவதற்காக கடந்தகாலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் விட்ட தவறுகளை அநுரகுமாரவும் தொடருவாரானால், முன்னர் பதவியில் இருந்தவர்களுக்கு ஏற்பட்ட கதியே ஏற்படும் என்பது நிதர்சனம்.



# மக்கள் நல்வாழ்வுக்கு ஜனாதிபதியால் குழு

கொழும்பு, ஒக். 16

**அனைத்துத் தரப்பினருடனும் ஒருங்கிணைப்பு அணுகுமுறையைப் பின்பற்றி பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ள குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. அதற்கமைய உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை தட்டுப்பாடின்றி சந்தைக்கு கிடைப்பதை உறுதி செய்வதற்கும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை இயன்றளவு கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும், அனைத்துத் தரப்பினருடனும் ஒருங்கிணைப்பு அணுகுமுறையைப் பின்பற்றி பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளவும் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கடவுச்சீட்டு விநியோகம்

கொழும்பு, ஒக்.16

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமை போன்று கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு 750,000 கடவுச்சீட்டுகளை வாங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## முட்டை விலை மீண்டும்




முட்டை விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தையில் 28 முதல் 32 ரூபா வரையில் இருந்த முட்டை ஒன்றின் விலை மீண்டும் 45 ரூபாவை தாண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தற்போதைய நிலவரத்தால் முட்டையின் விலை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி குறைவால் முட்டையின் விலை நாளுக்கு நாள் அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ரயிலில் தீ விபத்து

கொழும்பு, ஒக்.16

களுத்துறையில் இருந்து கொழும்பு, மருதானை நோக்கிச் செல்லும் விரைவு ரயிலில் நேற்று தீவிபத்து ஏற்பட்டுள்ளது. ரயிலின் பின் எஞ்சின் ஒரு பகுதியில் தீ பற்றி எரிந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் பதவிவிலகல்

கொழும்பு, ஒக்.16

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் பதவியில் சேவையாற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி திஸன் தேவப்பிரிய பண்டார விஜேகுணவர்த்தன தனது பதவியிலிருந்து விலகுவதாக கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார். அதற்கமைய, அவரது இராஜினாமாவை ஏற்றுக்கொள்வதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. (ச)

**நாளை**

17.10.2024

வியாழக்கிழமை - புரட்டாதி - 31

சுபநேரம் : 07.32- 09.02

ராகுகாலம் : 01.32 - 03.02

**நாளொரு நல்வார்த்தை**

**அற்புதமான விஷயம் ஒன்றை செய்யுங்கள், மக்கள் அதைப் பின்பற்றலாம்.**

- ஆல்பர்ட் ஸ்வைட்ஸர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 16.09.2024 திங்கட்கிழமை அன்று இறைவன் பாதம் சேர்ந்த எங்கள் அன்புத் தந்தை

**அமரர் பென்சமின் J.நவரத்தினம்**

அவர்களின் 31ம் நாள் வீட்டுப் பிரார்த்தனைகள் எதிர்வரும் (19.10.2024) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நிலாமனை"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

பிள்ளைகள்
077 266 8636

(CS/56433) J-1

## ட்ரம்ப் அச்சுறுத்தலானவர்

வொஷிங்டன், ஒக். 16

ட்ரம்ப் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலானவர். அமெரிக்க வாக்காளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய முதலாவது விடயம் இதுதான் என்று ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான கமலா ஹரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் ஞானஸ்கந்தன் (மணி அக்கா)



**தோற்றம்** 17.12.1947 **மறைவு** 14.10.2024

பருத்தித்துறை பத்திரகாளி கோவில் வீதியை சேர்ந்த திருமதி சிவபாக்கியம் ஞானஸ்கந்தன் நேற்று முன்தினம் (14.10.2024) திங்கட்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் திரு.து.ஞானஸ்கந்தன் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்-ஊறணி வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம்-அமிர்தவல்லி தம்பதிகளின் மகளும், உமையாள், பூரணி (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிரோஜன் அவர்களின் அன்பு மாமியாரும் நிமேஸ், சுருதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று முன்தினம் (14.10.2024) திங்கட்கிழமையன்று அவரின் இல்லத்திலிருந்து பிற்பகல் 4.00 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பத்திரகாளி கோவில் வீதி
பருத்தித்துறை

தகவல்:
குடும்பத்தினர்

(CS 56462) V-1

## தையிட்டியில் மீண்டும் கவனவீர்ப்புப் போராட்டம்


யாழ்ப்பாணம், ஒக். 16

தையிட்டியில் சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும், அதனைச் சுற்றியுள்ள தமிழ்மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று புதன் கிழமை மாலை 4 மணியளவில் விகாரைக்கு அருகில் மீண்டும் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.

நாளை வியாழக் கிழமை மாலை 7 மணியளவில் தொடர் கவன வீர்ப்புப் போராட்டம் நிறைவுபெறும். (ஒ-66)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

**தோற்றம்** 28 . 10 . 1947



**மறைவு** 17 . 09 . 2024

கடந்த 17.09.2024 அன்று மலேசியாவில் காலமான எமது குடும்பத் தலைவர்

**அமரர் வேலுப்பிள்ளை தவேஸ்வரன்**

**(பொறியியலாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)**

அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (17.10.2024) வியாழக்கிழமை போக்காலை வீதி, உடுப்பிட்டியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இவ் வழிபாட்டு நிகழ்விற்கு வருகை தந்து அமரருக்கு அஞ்சலி செலுத்துவதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி

குடும்பத்தினர்
077 653 3999, 077 028 0271
+601 932 68149

CS/28730) J-1

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 16 . 06 . 1938



**மறைவு** 12 . 10 . 2024

### திருமதி நடராசா ஜெகசோதி (சோதி)

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஜெகசோதி அவர்கள் கடந்த (12.10.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - தங்கரத்தினம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் நடராசா (உரும்பிராய் பெற்றோல் செற் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், தர்மபாலா (கனடா), லக்கினேஸ்வரி (லண்டன்), தேவபாலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சத்தியவாகிஸ்வரன் (லண்டன்), கௌரி (கனடா), சோனியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அன்னலட்சுமி, தவராசா, யோகராசா, பத்மாவதி மற்றும் அரசரத்தினம் (சுன்னாகம்), புஸ்பராணி (உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, வேலுப்பிள்ளை, உருத்திரநாயகி, புவனேஸ்வரி, வைத்தியலிங்கம், உதயகுலசிங்கம் மற்றும் சரசாதேவி (சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அர்ச்சனா, கீர்த்தனா, விஷ்னா, தர்ஜன், தர்சிகா, தர்மிகா, தர்மியன், நிசா, நிக்கித்தா, நிலா, மயூரன், ஹரிஸ், அஹரபி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆரிஜன், மித்திரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2024) புதன்கிழமை மு.ப 09.00 மணியளவில் 4ம் வீதி, உரும்பிராய் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் உரும்பிராய் ஒஸ்கா வீதியில் அமைந்துள்ள வேம்பன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

தேவபாலா - மகன் - +49 172 536 5312
லக்கினேஸ்வவரி - மகள் - +44 791 376 0289
தர்மபாலா - மகன் - +16 133 602 252

(CS/56456) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிகலங்கும் மத்திய கிழக்கு!

**2023** ஒக்ரோபரில் ஹமாஸ் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடி என்று சொல்லி, காஸாவை நிர்மூலமாக்கி வந்த இஸ்ரேல், அதன் பின்னர் ஹிஸ்புல்லா அமைப்பினரின் தாக்குதலுக்குப் பதிலடி என்ற பெயரில் லெபனான் மீது தாக்குதல் நடத்திவருகிறது. ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஆதரவளித்துவரும் ஈரானுடன் மீண்டும் பிரச்சினை எழுந்த நிலையில், இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்த, அதற்குப் பதிலடி என்ற பெயரில் ஈரான் மீதான தாக்குதல்களைத் தொடங்கவிருக்கிறது.

டெல் அவிவில் உள்ள விமானநிலையத்தின் மீது ஹவுத்திக்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, ஏமன் நாட்டின் மீதும் இஸ்ரேலின் கோபக் கணை திரும்பியிருக்கிறது. இஸ்ரேலின் செயற்பாடுகளால் மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றம் அதற்கு வெளியிலும் தாக்கம் செலுத்தும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் இஸ்ரேலுக்கு வழங்கிவரும் ஆதரவு இந்தப் பதற்றம் தொடர்வதற்கு வழிவகுக்கிறது.

### ஆரம்பம் முதலே அடக்குமுறை:

இஸ்ரேல் உருவான வரலாறு, அதன் பிறகான அதன் செயற்பாடுகள் போன்றவற்றுக்கும் மேற்கத்திய நாடுகளின் பரிபூரண ஆசி இருந்துவருகிறது. 20ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய, அமெரிக்க நலன்களை மேற்கு ஆசியாவில் பாதுகாக்கும் காலனியாதிக்க ஆக்கிரமிப்புத் திட்டத்தில் உதித்த நாடுதான் இஸ்ரேல். 1917இல் பலஸ்தீனத்தில் யூதர்களின் தாயகம் உருவாவதை ஆதரிக்கும் 'பால் போர் பிரகடன'த்தை வெளியிட்டது பிரிட்டன்.

1948ஆம் ஆண்டு பலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து இஸ்ரேலை உருவாக்கியது அமெரிக்க ஐ.நா. அவைக் கூட்டணி. இதனால், 8 லட்சம் பலஸ்தீனர்கள் அகதிகளாயினர். 15 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். பலஸ்தீனப் பகுதிகள் அண்டை நாடுகளின் கட்டுப்பாட்டுக்குச் சென்றது. உலக வரைபடத்தில் பலஸ்தீனம் காணாமலடிக்கப்பட்டது. 1967இல் நடந்த போரில் காஸா, மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியது. இதை எதிர்த்து ஹமாஸ் அமைப்பினர் பதிலடியாகத் தாக்குதல் நடத்திவந்தனர்.

ஹமாஸ் இயக்கத்தின் தொடர் தாக்குதலால் 2006ஆம் ஆண்டு யூதக் குடியேற்றங்களையும் இராணுவத்தையும் காஸாவில் இருந்து திரும்பப் பெற்றது இஸ்ரேல். அதன்பிறகு, காஸா எல்லைகளை மூடி மேற்குக் கரையில் வசிக்கும் பலஸ்தீனர்களுடன்கூடத் தொடர்புகொள்ளமுடியாத திறந்த வெளிச்சிறையாக மாற்றியது. காஸா மக்களின் அடிப்படைத் தேவைகளான எரிபொருள், உணவுப்பொருள்கள், மருந்துப் பொருள்கள், மின்சாரம், தண்ணீர் என அனைத்தையும் கட்டுப்படுத்திவிட்டது. ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஹமாஸ் உட்பட காஸாவில் செயற்படும் இயக்கங்கள் ஆயுதம் ஏந்திய தாக்குதலில் சிறிய அளவில் ஈடுபட்டு வந்தன. அதற்கு எதிர்வினை என்ற பெயரில், காஸா மீது கடந்த 17 ஆண்டுகளில் 5 போர்களை நடத்தி, பலஸ்தீன மக்களைக் கொன்று குவித்திருக்கிறது இஸ்ரேல்.

போராட்ட வடிவங்கள் எவையாயினும் இஸ்ரேலின் மொழியோ வன்முறை என்பதாகவே இருக்கிறது. அதுமட்டுமல்ல, தான் தயாரிக்கும் ஆயுதங்களையும் இராணுவத் தளவாடங்களையும் பலஸ்தீனர்கள் மீது பயன்படுத்திச் சோதித்தறிந்து, அவற்றைப் பிற நாடுகளுக்கு இஸ்ரேல் ஏற்றுமதி செய்வதாகவும் ஒரு தகவல் உண்டு. இஸ்ரேலின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த வேண்டிய ஐ.நா. அவையே கண்காணிப்பு, தற்காப்பு தொடர்பான சாதனங்களை இஸ்ரேலிடமிருந்துதான் பெருமளவில் வாங்குகிறது என்பதும் கவனிக்கத்தக்கது.

### ஒக்ரோபர் 7 தாக்குதல்:

2022ஆம் ஆண்டில, நெதன்யாகு தலைமையிலான வலதுசாரி அரசு மேற்குக் கரையில் தொடர்ந்து அப்பாவி பலஸ்தீன மக்களைச் சுட்டுக்கொன்றதுடன், மேற்குக் கரையை இஸ்ரேலுடன் இணைக்கப்போவதாகவும் கூறியது. 2020ஆம் ஆண்டு முதல் அமெரிக்கத் தலையீட்டால் அரபு நாடுகள் ஒவ்வொன்றாக இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தத்தில் (ஆபிரகாம் ஒப்பந்தம்) கையெழுத்திட்டன.

2023 ஒக்ரோபரில் இஸ்ரேல் சவூதி அரேபியா இடையே ஒப்பந்தம் கையெழுத்தாக இருந்தது. இஸ்ரேலின் இத்தகைய நடவடிக்கைகளால் தங்கள் பிரச்சினை முழுவதுமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுமோ என்ற பலஸ்தீன மக்களின் அச்சத்தின் வெளிப்பாடே 2023ஆம் ஆண்டின் ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் நடத்திய தாக்குதலாகும். ஆனால், இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு பல்வேறு பாதிப்புகளை இஸ்ரேல் ஏற்படுத்தி வருகிறது. இஸ்ரேலின் நீதித்துறை அதிகாரத்தைக் குறைக்கும் முயற்சிகளை மேற்கொண்ட நெதன்யாகு தலைமையிலான அரசுக்கு எதிராக, 2023 ஜனவரியில் தொடங்கிய போராட்டம் ஒக்ரோபர் வரை தொடர்ந்தது. இந்தப் போராட்டங்கள் நெதன்யாகு அரசுக்கு அரசியல்ரீதியாக நெருக்கடியை உருவாக்கியிருந்த சூழலில்தான் ஹமாஸின் தாக்குதல் நடைபெற்றது. கையறு நிலையில் இருந்த நெதன்யாகுவுக்கு இத்தாக்குதல் பெரும் வாய்ப்பாக அமைந்துவிட்டது.

### சர்வதேச சமூகத்தின் எதிர்வினை:

இஸ்ரேல் அரசின் மிகக் கொடூரமான இத்தாக்குதல்களையும் மனித உரிமை மீறல்களையும் தடுப்பதற்கு உலக நாடுகள் உறுதியான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்வதற்கு அமெரிக்கா பெரும் தடையை உருவாக்கி வருகிறது. இத்தாக்குதல்களுக்கு எதிராக அமெரிக்காவில் நடைபெற்ற மாணவர்களின் போராட்டங்கள், இளம் யூதர்களின் 'எங்களின் பேரால் இதைச் செய்யவேண்டாம்' என்கிற முழக்கங்கள், சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்காவின் வழக்கு ஆகியவை உலகின் கவனத்தை ஈர்த்தன. காஸாவில் ஆறு பிணைக்கைதிகள் கொல்லப்பட்டவுடன் போரை நிறுத்துமாறு இஸ்ரேலில் தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்தியபோதும் மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. ஈரானின் நேச சக்திகளான லெபனானின் ஹிஸ்புல்லா, ஏமனின் ஹவுத்திகள் போன்ற அமைப்புகள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக அவ்வப்போது இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்திவருகின்றன.

### நெதன்யாகுவின் அதிகார வெறி

ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள நெதன்யாகு விரைவில் சிறை செல்லும் சூழல் உள்ளது. எனவே, போரைத் தொடர்வதன் மூலம்தான் தனது அதிகாரத்தைத் தக்கவைக்க முடியும் என அவர் கருதுகிறார். சமீபத்தில் ஹிஸ்புல்லாவின் பல தலைவர்கள் கொல்லப்பட்ட நிலையில், தற்போது அதன் தலைவரான ஹஸன் நஸ்ரல்லாவும் கொலைசெய்யப்பட்டுள்ளார். இத்தாக்குதலில் பல அப்பாவி மக்களும் கொல்லப்பட்டனர். நஸ்ரல்லாவின் இறுதி அஞ்சலி நிகழ்வு பெரிய அளவில் நிகழ்ந்தால், அங்கும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால், ரகசியமாக அவரது சடலம் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு இஸ்ரேலின் ஆதிக்கம் பரவியிருக்கிறது. இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கி அமெரிக்கா அதன் செயற்பாடுகளை நியாயப்படுத்துகிறது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன், மேற்கு ஆசியாவில் போர் மூள்வதைத் தவிர்க்கவேண்டும் என்று பேசினாலும் அதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கவில்லை.


காஸா போரில் இன்னும் பிணைக் கைதிகளை மீட்கமுடியவில்லை, இராணுவரீதியான வெற்றிகளைப்பெற முடியவில்லை. எனவே, காஸாவில் நடப்பவை குறித்து உலகத்தின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகப் போரை விரிவுபடுத்தி அமெரிக்காவையும் நேரடிப் போருக்குள் இழுத்து வெற்றியை நிலைநாட்ட விரும்புகிறார் நெதன்யாகு. ஓராண்டாக காஸா மீது நிகழ்த்திய அட்டூழியங்களுக்கு எதிர்ப்புகள் எதுவும் இல்லாத நிலையில், எதையும் செய்யத் துணிகிறது இஸ்ரேல் வலதுசாரி அரசு. மேற்கு ஆசியாவில் இஸ்ரேலால் தொடமுடியாத இடங்களே இல்லை என்று நெதன்யாகு இறுமாப்புடன் சொல்கிறார். ஈரானின் எண்ணெய்க் கிடங்குகள் மீதும் இஸ்ரேல் குறிவைக்கிறது. ஈரான் மீது அதிருப்தியில் இருக்கும் அமெரிக்கா இதற்கும் பச்சைக் கொடி காட்டிவிட்டது. இந்தப் பிரச்சினை பெரிய அளவில் வெடித்தால், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற எண்ணெய் உற்பத்தி நாடுகளும் இந்தப் பிரச்சினைக்குள் இழுக்கப்படும். தாக்குதல்களை இஸ்ரேல் கைவிடுவதாகத் தெரியவில்லை. ஈரானும் பின்வாங்கப்போவதில்லை. கடைசியில், பாதிக்கப்படுவது என்னவோ அப்பாவி மக்கள் தான்!



நன்றி - த ஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதானிய உணவுகளின் பங்களிப்பு



இன்று உலக உணவு தினம் அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

சித்த மருத்துவர்
தியாகராஜா சுதர்மன்

இலங்கையில் ஊட்டச்சத்துகளின் குறைபாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக கல்சியம், இரும்பு, நாகம் மற்றும் விற்றமின் ஏ என்பன பிரதான குறைபாடுகளைக் கொண்ட சத்துகளாகக் காணப்படுகின்றன என உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. ஊட்டச் சத்துகளின் குறைபாடானது உள வளர்ச்சிக் குறைபாடுகள், உடல் ஆரோக்கியக் குறைபாடுகள், செயற்திறன் குறைபாடுகள் என்பவற்றுடன் இறப்புக்கும் காரணமாகின்றன. ஊட்டச்சத்துக்களான கனிமங்கள், உயிர்ச்சத்துகள் அதிகமாகப் பழங்கள், மரக்கறிகள், மாமிச உணவுகள் என்பவற்றிலேயே காணப்படுகின்றன.

**ஊட்டச்சத்துகள் குறைபாடு ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள்**

இன்றைய பொருளாதார நிலையில் ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவுகளை தேவையான அளவில் எல்லோராலும் இலகுவில் பெறமுடியாதுள்ளது. ஒரே மாதிரியான அதிக மாப்பொருள் கொண்ட உணவு வகைகளை உள்ளெடுக்கும் உணவுப் பழக்கம், ஊட்டச்சத்துகள் தொடர்பான அறியாமை, சரியான அளவில் தேவையான உணவுகளை உள்ளெடுக்காமை உதாரணமாக ஒரு நாளைக்கு நாம் உண்ணும் பழங்களும் மரக்கறிகளும் மொத்தமாக 400 கிராம் இருத்தல் வேண்டும், ஆனால் சராசரியாக இலங்கையர் ஒருவர் நாள் ஒன்றுக்கு 113 கிராம் மரக்கறிகளும், 76 கிராம் தானியங்களும் என மொத்தமாக 189 கிராம் அளவே உண்கின்றனர் என 2016 புள்ளி விவரம் சொல்கின்றது. பெரும்பாலானவர்கள் விளம்பரங்களைப் பார்த்தும் சுவைகளின் அடிப்படையிலுமே உணவுகளைத் தவறான முறையில் தேர்வு செய்கின்றனர். வெவ்வேறுபட்ட காலநிலை பருவங்களைக் கொண்ட நம் நாட்டில் பருவகாலங்களுக்கு ஏற்ப உணவுகளை உண்ணும் உணவுப்பழக்கங்களும் அருகிவருவதுடன் குறித்த பருவகாலங்களில் இயற்கையாகக் கிடைக்கும் பழங்கள், கிழங்குகள் போன்ற உணவுப்பொருட்களை உண்ணும் பழக்கங்களும் அருகிவருவது குழந்தைகளுக்கு உணவுகளை அறிமுகம் செய்யும் போது துரித உணவுகளையும், சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மாவை அடிப்படையாகக் கொண்ட உணவுகளையும் கூடுதலாக பயன்படுத்துகின்றனர். இதனால் பிள்ளைகளுக்கு பாரம்பரிய, ஊட்டச்சத்துள்ள இயற்கையான பெரும்பாலான உணவுகளின் சுவை பழக்கமுடையதாகவும், ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருப்பதில்லை.

**ஊட்டச்சத்துக் குறைபாடுகளில் சிறுதானியங்களின் பங்கு**

பாரம்பரிய உணவுகளை, ஊட்டச்சத்துகள் நிறைந்த இலகுவாக எமது பிரதேசங்களில் உற்பத்தி செய்யக் கூடிய சிறுதானிய உணவுகளை சிறுவயதிலேயே அறிமுகப்படுத்தத் தவறுகின்றனர். முக்கியமாக சிறுதானியங்களில் இருந்து சுவையான உணவுகளைச் செய்யும் முறைகளையும் நமது சமூகம் தவறவிடுவதால் அதிக நார்ச்சத்தையும், நிறைந்த கனிமங்களையும் கொண்ட சிறுதானிய உணவுகள் சுவையின் அடிப்படையில் விருப்பமற்ற உணவுகளாக மாறியுள்ளன.

சிறுதானியங்கள் அதிகளவில் கல்சியம், இரும்பு, நாகம், பொஸ்பரஸ், பி வகை உயிர்ச்சத்துகள் என்பவற்றுடன் ஏனைய தானியங்களுடன் ஒப்பீட்டளவில் அதிகளவு புரதச் சத்தையும் கொண்டது. குறிப்பாக கம்பு அதிகளவு இரும்புச் சத்தினையும், குரக்கன் அதிகளவு கல்சியத்தினையும் கொண்டுள்ளன. மேற்படி ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்கு, பழங்கள், மரக்கறிகள், இறைச்சி வகைகளுடன் இவற்றுக்கு மேலதிக குறை நிரப்பு மூலங்களாக, பயன்தரக்கூடியதாக சிறுதானிய உணவுகள் காணப்படுகின்றன. இங்கு சிறுதானியங்கள் ஒப்பீட்டளவில் பொதுவான தானியங்களை விட ஊட்டச்சத்துகள் நிறைந்தவை. அதிகளவு நார்ச்சத்தையும் கொண்டவை இதனால் சிறுதானியங்களை Nutricereals என அழைக்கப்படுகின்றன. எனவே நன்கு சுத்திகரிக்கப்பட்ட கோதுமை மா சார்ந்த உணவுகள் சிற்றுண்டிகளை விட, நன்கு தீட்டப்பட்ட அரிசிமா உணவுகளை விட சிறுதானிய உணவுகள் ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்குச் சிறந்தவை. துரித உணவுகளால் இன்று இலங்கையில் 30 வீதமான சிறுவர்கள் சர்ம ஒவ்வாமை, ஆஸ்துமா, பீனிசம், வயிற்றுப் போக்கு போன்ற ஒவ்வாமைகளுக்கு ஆளாகின்றனர். இவ் ஒவ்வாமைகள் மரபணு ரீதியாகப் பரவக் கூடியன என கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் தோல் நோய் மருத்துவர் சிறியானி சமரவீர தெரிவித்துள்ளார். பெரும்பாலான தானியங்களில் காணப்படும் உணவுக் கால்வாயில் ஒவ்வாமையை ஏற்படுத்தும் குளுட்டன் எனப்படும் பதார்த்தம் பொதுவாக சிறுதானியங்களில் காணப்படுவதில்லை. இதனால் குளுட்டன் ஒவ்வாமை உள்ளவர்கள், விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு சிறந்த உணவாகவும் காணப்படுகின்றது. மருத்துவக் குணங்கள் மிக்க தாவர இரசாயனங்களும் சிறப்பாக சிறுதானியங்களில் காணப்படுகின்றன. ஊட்டச்சத்துகள், புரதம், நார்ச்சத்து, தாவர இரசாயனங்களின் பங்காக பல ஆரோக்கியம் தரும் குணங்களைச் சிறுதானியங்கள் கொண்டுள்ளதாக சித்த மருத்துவமும் அதேபோல் நவீன ஆய்வுகளும் கூறுகின்றன. பொதுவாக சிறுதானியங்களின் சமிபாட்டின் பின்னரான செயல் ஆரோக்கியத்துக்கு சிறந்ததாகக் காணப்படுகின்றது. சித்த மருத்துவத்தின் பிரகாரம் இவற்றின் சுவை இனிப்பாகவும் சமிபாட்டின் பின் துவர்ப்பி செயல் கொண்டனவாகவும் காணப்படுகின்றன. நீரிழிவு, இதய நோய்கள், அதிகுருதி அமுக்கம், கொலஸ்திரோல் போன்ற நோய்நிலைகளில் சிறந்த பயன் அடைய உதவுகின்றன. தைரொயிட் சுரப்பியின் சீரான தொழிற்பாட்டுக்கும் , உணவுக் கால்வாயின் சீரான தொழிற்பாட்டுக்கும், மலக்கட்டினை போக்கவும் குடற் புற்றுநோய்களை தடுக்கவும் உதவுகின்றன. உணவு உண்ட திருப்தியை விரைவாகத் தருவதன் மூலம் மன மகிழ்வைத் தருகின்றது, குடலில் அழற்சி ஏற்படுத்தாது, குடல் அழற்சி உள்ளவர்களும், விசேட தேவையுடைய சிறுவர்களுக்கும் உகந்தது. என்பு, பல் ஆரோக்கியத்துக்கு உதவுகின்றன. அதி உடற்பருமன் உருவாவதைத் தடுக்கின்றது.




**விருப்புணவாக சிறுதானியங்களை மாற்றிக்கொள்வது எப்படி**

சிறுவயது முதலே சிறுதானிய உணவுகளை குழந்தைகள் சிறுவர்களுக்கு அறிமுகஞ்செய்தல் வேண்டும். பொதுவாக மக்கள் குறிப்பாக சிறுவர்கள் சிறுதானிய உணவுகளை விரும்பி உண்ணக் கூடியதாக இல்லாமைக்கு காரணம் சமைத்த பின் நேரம் செல்ல ஏற்படும் உணவின் கடினத் தன்மை காணப்படுகின்றது. இதற்கு சிறுதானியங்களில் உள்ள அதிகமான கனிமங்களின் அளவு, நார்ச்சத்தின் அளவு, அவற்றில் காணப்படும் தாவர இரசாயனங்களின் தன்மைகளும் ஆகும். சிறுதானியங்களை நீரில் ஊறவைத்து அல்லது ஈரலிப்பாக வைத்திருந்து முளைக்க விட்டு பயன்படுத்தல், இதன் போது ஊட்டச்த்துகளின் பெறுமதி பல மடங்கு அதிகரிக்கின்றது. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் உணவுகள் சிறந்த ஊட்டச்சத்துள்ள உணவுகளாக இருப்பதால் இவை "SUPPER FOODS" எனப்படுகின்றன. கச்சான், சீனி, தேங்காய்ப்பூ, பனங்கட்டி, கீரை வகைகள், இலைவகைகள்,கறி வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளல்.சிறுதானியங்களை ஓரளவுக்கு தீட்டி பயன்படுத்தல். சிறுதானியங்களில் குரக்கன், சாமை, கம்பு, தினை, இறுங்கு, வரகு என்பன எமது பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனாலும் இவற்றின் மீதான கவனம் மக்கள் மத்தியில் குறைவாகவே காணப்படுகின்றது. பொதுவாக ஏதேனும் நோய்கள் வந்தபின்னர்தான் அதற்கான மூலிகைகளையும் உணவுகளையும் மக்கள் தேடுகின்றனர். அதனால் பெரிதளவில் நன்மைகள் இல்லை எனலாம்.

**சிறுதானியங்களின் அதிகரித்த விலை**

'பஞ்சம் போக்கிகள்' என பண்டைய ஏழை மக்களால் பயன்படுத்தப்பட்ட சிறுதானியங்கள் இன்றைய இறக்குமதிப் பொருளாதாரத்தில் அரிசி, போதுமை மா என்பவற்றுடன் ஒப்பிடும்போது விலை கூடியதாகவே காணப்படுகின்றன. இன்று வசதி படைத்தவர்களே இவற்றைப் பயன்படுத்தக் கூடியநிலை காணப்படுகின்றது. மேலை நாடுகள் மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் சிறுதானியங்களில் இருந்து பிஸ்கட் போன்ற நொறுக்குத் தீனிகள், காலை பிரதான வேளை உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றின் கேள்வியும் அங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. குறுகிய காலத்தில் வறட்சியான காலங்களிலும் பயிரிடக்கூடிய எமது பிரதேசத்துக்குரிய சிறுதானியங்களை பயிரிட்டு நாம் பயனடைவதுடன் ஏற்றுமதிகளையும் செய்து கொள்ளலாம். இதற்கு சிறுதர்னிய பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதுடன் அவற்றில் இருந்து உணவு வகைகள், சிற்றுண்டி வகைகளையும் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யலாம். எமது நாளாந்த வாழ்வில் சிறுதானிய உணவுகளை சேர்த்தல் உடல் ஆரோக்கியத்துக்கும், ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் சிறந்ததாக அமையும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கைத்தொழில்கள் காலத்தின் தேவை

தி.சாந்தகுமார்

'வெறுங்கை என்பது மூடத்தனம் விரல்கள் பத்தும் மூலதனம்' என்றான் நவயுகக் கவிஞன். கைகளைக் கொண்டே கவினுறும் வாழ்க்கை வாழக் கைத்தொழில்கள் கற்றுக் கொடுக்கின்றன. கைத்தொழில் நாடுகளே உலகின் வல்லமையாய் விளங்கும் இக்காலத்தில் கைத் தொழில்கள் எனப்படுபவை கற்றுக் கொள்ளவேண்டியவையும், கால மாற்றத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியவையுமாகும்.

நாம் கற்கும் கல்வி எம்மைத் தனித்துவப்படுத்த வேண்டும். நாம் தனித்துவப்பட வேண்டுமானால் கற்ற கல்வியைக் கொண்டு தொழில்களை எளிமைப்படுத்த வேண்டும். அவ்வாறு எளிமைப்படுத்தும்போது கைத்தொழில் என்பது எம் வசமாகும். நம்பிக்கை நானிலத்தில் வளரும், நம் தேவையை நாமே நிறைவேற்றிக் கொள்ளலாம்.


நெசவுத் தொழில், கூடை பின்னுதல், மட்பாண்டங்களை வனைதல், தையல் வேலை, மரத்தளபாடங்கள் செய்தல், வர்ணப்பூச்சு என்று கைத்தொழில்கள் நீண்டுகொண்டே செல்கின்றன. கைத்தொழில்கள் மனித வருமானத்தைப் பெருக்கி வசதியளிக்கின்றன. பொருளாதாரப் பயன்களைப் பெற்றுக் கொடுக்கின்றன. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. அந்நிய நாணயத்தை அள்ளித் தருகின்றன. சூழல் நேயத்தைக் காக்கின்றன.

இன்று பாடசாலைக் கல்வியில் தொழிற்பாடங்கள் புகுத்தப்பட்டு அவற்றின் அவசியம் அறிவுறுத்தப்பட்டு, மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியே செல்கையில் கையில் ஒரு தொழிலோடு சமூகத்துக்குள் பிரவேசிக்க வேண்டுமென எல்லோரும் விரும்பும் நிலை இன்று உருவாகியுள்ளது. எமது நாட்டில் மட்டுமல்ல உலகெல்லாம் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ள இன்றைய காலகட்டத்தில், அந்தத் திண்டாட்டத்தினை இல்லாதொழித்து வாழ்க்கையில் கொண்டாட்டத்தினை உண்டாக்கக் கூடிய அஸ்திரமே கைத்தொழிலாகும். இதனைத்தான் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்

***கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்***
***கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்***
***எத் தொழில் எதுவும் தெரியாமல்***
***இருந்திடல் உனக்கே சரியாமோ*** என எம்மைப் பார்த்துக் கேட்கிறார். எம் மண்ணில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையான பொருளாதார நெருக்கடியை பொடிப் பொடியாக்கி எம்மை மீண்டும் மிடுக்கோடு மீண்டெழ மகத்தான சக்தியாய்க் கைத்தொழில் விளங்குமென்றால் அது மிகையில்லை.

இன்றைய சூழலில் வெள;வேறு தொழிலில் ஈடுபடுவோரும் மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் மார்க்கமாகக் கைத்தொழில் காணப்படுகிறது. வருமானத்துடன் சிலருக்கு பொழுது போக்காகவும் மனஅழுத்தத்தைக் குறைக்கும் மகா மருந்தாகவும் இத்துறை விளங்குகின்றது. இதனால்த்தான் எட்டயபுரம் எமக்களித்த முண்டாசுக்கவிஞன் பாரதி தன் புதிய ஆத்தி சூடியில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
யந்திரங்கள் வகுத்திடுவீரே
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே
கடலில் மூழ்கி நன் முத்தெடுப்பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப்
புவிமேல் ஆயிரத் தொழில் செய்திடுவீர்
எனப் பாடிக் கைத்தொழில் போற்று
எனக் கவியுரைக்கின்றான். ■



8

# சிறந்த திட்டமிடல் மூலம் நவீன யுகத்தை வெல்வோம்

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)

உலகில் அனைத்துத் தளங்களிலும் திட்டமிடல் என்பது அடிப்படையான ஒன்றாக இருக்கின்றன. திட்டமிடவில்லை என்றால் எவற்றையும் அடுத்த நிலைக்கு கொண்டு செல்லமுடியாது. இவற்றில் விமானப் பயணம் பற்றிய ஒரு விடயத்தை எடுத்தால் அதன் திட்டமிடல் எப்படி உயர்வாக இருக்கவேண்டும் என்று எண்ணிப் பாருங்கள். அந்த விமானத்தின் இஞ்சின் இயங்க ஆரம்பித்தது முதல், அந்த விமானம் சென்றடையும் இடம் வரை மிகவும் நுணுக்கமான திட்டமிடல் அவசியம் தேவைப்படுகிறது.

இதனைப் போன்றுதான் எமது வாழ்விலும் வெற்றி என்ற இடத்தை சென்றடைவதற்கு திட்டமிடல் மிகவும் அவசியம். எந்தவொரு பயணம் மேற்கொள்ளும் போதும் எங்கே செல்ல வேண்டும்? ஏன் அங்கே செல்ல வேண்டும்? எவ்வளவு பணம் தேவைப்படும்? எப்போது மீண்டும் திரும்புவோம்? என்றெல்லாம் திட்டமிடுகின்றோம். அப்படியென்றால் எங்கள் வாழ்க்கையை வெற்றி என்ற இலக்கை நோக்கி முன்னகர்த்திச் செல்வதற்கு ஏன் நாம் பெரிதாக திட்டமிடுவதில்லை? என்பதனை நாம் இப்போதே எங்களிடம் கேட்டுக்கொள்ளவேண்டும். நவீன யுகம் பெரிதும் வேறுபட்டுள்ளது, அதிகம் போட்டிகள், சவால்களுக்குள் எங்களையே நாம் முதலில் வெற்றி கொள்வதற்கும், எதிர்கால வெற்றியை எங்களின் ஊடாக அடைந்து கொள்வதற்கும் திட்டமிடல் பெரிதும் தேவைப்படுகின்றது. எதையும் அடையாமல் இருப்பதற்கு, தோல்வியடைவதற்கு எந்தவிதமான திட்டமிடல்களும் அவசியமில்லை. ஆனால் உங்களைப்போன்று இலக்கை அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களுக்கு, வெற்றியடைவதற்கு திட்டம் மேற்கொண்டேயாக வேண்டும் என்பது தவிர்க்கப்படமுடியாத வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். "காலை எழுந்தவுடன் முதல் 60 நிமிடங்கள் முக்கியமானவை. ஏனெனில் அவை அன்றைய தினத்தின் விலைமதிப்பில்லா தருணங்கள்" செலவு செய்யும் இந்த நிமிடங்களானது அதனைத்தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு நிமிடத்தின் மீதும் ஆழமானதாக்கம் ஏற்படுத்துவதற்கான சக்தி கொண்டவை. சந்திரன் மாலையில் தோன்றி, காலையில் மறைவது வரை சிறப்பாகத் திட்டமிடப்பட்ட வண்ணம் தன்னுடைய பொறுப்பினை நிறைவேற்றுகின்றது. அதேபோன்று காற்று எப்போது வீசவேண்டும்?. மழை எப்போது பெய்ய வேண்டும்? உலகம் எவ்வளவு வேகத்தில் சுழர வேண்டும்? என்று இயற்கை தன்னுடைய அனைத்துச் செயற்பாடுகளையும் சிறப்பாகத் திட்டமிடுவதால்தான் உலகம் இப்போதும் ஒளியோடு, துடிப்போடு, இயங்கு நிலையில் இருக்கிறது. இவ்வகையான இயற்கையின் பண்பையே வெற்றிபெற்ற மனிதர்களும் தங்கள் வாழ்வில் பின்பற்றியிருக்கிறார்கள், அதனால்தான் அவர்கள் வாழ்விலும் வெளிச்சம் ஏற்பட்டு இருக்கிறது. இப்போதும் அவர்கள் துடிப்போடு இயங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்புது யதார்த்தமானது.

வெற்றி பெற்ற மனிதர்கள் திட்டமிடலைச் சில பிரிவுகளாக வகுத்திருக்கிறார்கள். அவை குறுகியகால, நீண்டகால இலக்குகள் ஆகும். இவ்வாறான திட்டமிடல்கள் ஒவ்வொரு நாளையும் அர்த்தமாகப் பயன்படுத்த வழிசெய்கிறது. "உங்களுடைய நாளை நீட்டித்துக் கொள்ள விரும்பினால் இரவிடம் இருந்து சிலமணி நேரங்களை அபகரித்து விடுங்கள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. உங்கள் வாழ்க்கையில் வெற்றி என்பது கட்டாயமான ஒரு தேவையாக இருந்தால் இப்போதைய நிலையில் இருந்து மாறியாக வேண்டுமாக இருந்தால் ஒவ்வொரு நாளையும் மணித்தியாலங்களையும், நிமிடங்களையும், வினாடிகளையும் சிறப்பாக திட்டமிடுவோம், வாழ்வில் உயர்வான வெற்றிகளை அடைந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மண்வாசம் வீசிய கிளிநொச்சி பண்பாட்டு விழா!

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் திறந்தவெளி அரங்கில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான எஸ்.முரளிதரன் தலைமையில், தமிழ் இன்னிய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வருதலைத் தொடர்ந்து ஆரம்பமானது

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஷ் மற்றும் கிளி.இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை அதிபர் சு.சுதாஸ்கரன், கிளி.திருவையாறு கலைக்குரிசில் நா.யோகேந்திரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


கௌரவ விருந்தினர்களாக கலாசாரப் பேரவையின் உப தலைவர் கலாபூஷணம் பொன் தில்லைநாதன், கரைச்சிப் பிரதேச செயலக கலாசார பேரவை உறுப்பினர் கலாபூஷணம் தேவராசா தியாகராசா, பச்சிலைப் பள்ளி கலாசாரப் பேரவை உறுப்பினர் கலைக்குரிசில் செல்லையா சுந்தரம்பிள்ளை, கலைக்கிளி ஆ.பாலேஸ்வரன் கண்டாவளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலைஞராகவும் பல கலைப்படைப்புக்களை ஆற்றி மறைந்த பூநகரி இரணைமாதாநகர் பகுதியை சேர்ந்த அமரர் கலைநகரி சந்தியா புவனேந்திரனை நினைவுறுத்தும் வகையில் அமைக்கப்பட்ட அரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வின் போது கலைக்கிளி விருது மற்றும் இளங்கலைஞர் விருது என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பாடசாலைகளின் முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (113)



# திருமலை நவத்தின் தேசாந்தரம் குறுநாவல்

■ சயனிகா ஸ்ரீ
ஊடகத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.




திருமலையின் மூத்த ஊடகவியலாளரும், எழுத்தாளரும், இலக்கியவாதியும், வரலாற்று ஆய்வாளரும், அரசியல் ஆய்வாளருமான திருமலை நவத்தின் (சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்) தேசாந்தரம் குறுநாவல் என் கையில் வாசிக்கக் கிடைத்தது. குறுநாவல் என்பதனால் மட்டுமல்ல அதன் படைப்பு யதார்த்தமானதாகவும் உணர்வுகளை கண்முன்னே கொண்டு வரும் தன்மையினாலும் ஓரிரு தினங்களிலேயே நாவலை வாசித்து முடித்துவிட்டேன்.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலை வரலாற்று ஆவணமாக இந்த நாவல் பிரசவித்துள்ளது. அந்த வகையில் தேசாந்தரம், வரலாற்று நிகழ்வுகளை அனைவர் மனதிலும் ஆழமாகப் பதியும் வகையில் மிகவும் விறுவிறுப்பாக எழுதப்பட்டுள்ளது. யுத்தத்தின் போது நடந்த ஆட்கடத்தல்கள், படுகொலைகள், காணாமலாக்கப்பட்டமை, இன அழிப்புகள், அகதி வாழ்க்கை, புலம்பெயர்வுகள், சிறை வாழ்க்கை பற்றிய பல உண்மைகள் வெளிக்கொணரப்படாதிருக்கும் நிலையில் தமது வாழ்விடத்திற்கு அருகிலும், மூதூரிலும் நடந்த இரு துன்பியல் சம்பவங்களை தொகுத்து காத்திரமான முறையில் நூலாசிரியர் நாவலை எழுதியுள்ளார்.

கதைக்களம், பாத்திரமுனைப்பு, வழக்கமான நிகழ்ச்சிகள், பாத்திரங்கள், உரையாடல்கள் என்பன வர்ணனைப் போக்கில் கற்பனை உலகுக்கு அழைத்துச் செல்லும் வகையில் அமைந்திருக்கும். 'தேசாந்தரம்' கதை நடைபெறும் களமான திருகோணமலையின் இயற்கை அழகும், அதனை எழுத்தாளர் வெளிப்படுத்தும் விதமும், திருகோணமலைக்கு முன் பின் வந்திராத வாசகனை கூட அந்த இடங்களுக்கு செல்லத் தூண்டும் தன்மையின. நாவலில் இடம்பெற்ற கதாபாத்திரங்களும் நாம் வாழும் சமூகத்தில் தினமும் நடமாடிக் கொண்டிருக்கும் உண்மையான மனிதர்களாக யதார்த்தத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. நம் உணர்வுகளையும் நினைவுகளையும் உள்ளத்து உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கின்றது. அத்தோடு பாத்திரச்சேர்க்கைகள் தேவை கருதி அளவோடு இடம்பெற்றுள்ளன. கதாபாத்திரங்களுக்கிடையிலான உரையாடல்களும் யதார்த்தமாகவும் இயல்பாகவும் இருக்கின்றன.

ஏக்கம், தவிப்பு, எதிர்பார்ப்பு, விரக்தி, வலிகள், வேதனைகள் அனைத்தையும் கதை முழுவதிலும் அள்ளித் தெளித்திருக்கின்றார். இவை அனைத்தின் மூலமும் கதாபாத்திரங்களுக்கு உயிர் கொடுத்து இயல்பான கதையோட்டத்துடன் உரையாடல் பாணியில் உயிரோட்டமாக நகர்த்தி இருக்கின்றார். உளவியல் தெறிப்புகள் நாவலில் அதிகம் எடுத்துக் காட்டப்படுகின்றன. நாவலின் பின்னணி வர்ணனைகளும் உரையாடல்களும் வாசகர்களை கதையோட்டத்துடன் ஒன்றிக்க வைத்து இதற்கு அடுத்து என்ன நடக்கப் போகிறது? என்ற ஆர்வத்தை தூண்டி விடுவதாக அமைகின்றது. கால வெள்ளமென்பது நதியைப் போல நீளமாகவோ, ஆழியைப் போலஆழமாகவோ இருப்பதில்லை. அது கண்ணுக்குப் புலப்படாத பஞ்சபூதங்களின் நகர்வு என்பதை ஆழமாக முன்வைத்திருக்கின்றார். இது போன்றே அனைத்துச் சந்தர்ப்பத்திலும் நினைவோட்ட உக்தியுடன் வெளிப்படுத்தி இருப்பது கதை சொல்லும் பாங்கை வெளிப்படுத்தி இருக்கின்றது.

நாவலின் நாயகியான நீலா கதாபாத்திரத்தை ஆரம்பத்தில் சாதாரண கதாபாத்திரமாக சித்தரித்து பிறகு ஏக்கம், தவிப்பு, கவலை கொண்டவளாக காட்டி இறுதியில் நயந்தனின் தொலைபேசி உரையாடலை தொடர்ந்து எத்தனை பிரச்சினைகள், சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய பக்குவப்பட்ட பெண்ணாக வெளிப்படுத்தி இருப்பது பெண்மையின் பக்குவத்தை வெளிப்படுத்துகிறது. உண்மையான நட்பின் தன்மையை ஆசிரியர் ஆழமாகப் பதிவு செய்துள்ளார். தனது உயிருக்குயிரான நண்பி வித்தியா படுகொலை செய்யப்பட்டதும் நீலா படும் வேதனையை ஆசிரியர் மிக ஆழமாக சித்தரித்து இருக்கின்றார்.

வடக்கிலும் கிழக்கிலும் 1983ஆம் ஆண்டிலிருந்து 26 வருட கால உள்நாட்டு யுத்தத்தில் தமிழ் மக்கள் அனுபவித்த வேதனைகள், இழப்புகள், அவலங்கள், உறவுகளை இழந்த வேதனைகள், தமிழரின் பூர்வீக நிலங்கள் அரச படைகளால் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்டமை, பிரதான இடங்களில் திடீர் திடீரென முளைத்த புத்தர் சிலைகள், அரச பயங்கரவாதம் திட்டமிட்டு தமிழ் இளைஞர்களின் உரிமைகளை காவு கொண்டமை, சுற்றிவளைப்புகள், சித்திரவதைகள் ஆட்கடத்தல்கள், காணாமல் ஆக்கப்பட்டமை, உயிருக்கும் வாழ்வுக்கும் உத்தரவாதம் இல்லாத நாட்டுச் சூழல் என்பவற்றை காலச் சூழல் உணர்ந்து நூலாசிரியர் ஆணித்தரமாக பதிவிட்டு இருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

இல 134, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியில் வசிக்கும் வடிவேல் அனுசலா ஜயகொடி ஆகிய நான் எனது பெயரை வடிவேல் அனுசலா என பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் வடிவேல் அனுசலா என்று கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

வடிவேல் அனுசலா

(CS/56461) J-1

ஸ்ரீ சக்திவேல் ஜோதிட சேவை

தொடர்புகளுக்கு:
+94766399968
+94777999696
Sri Sakthivel Astrology

1. உங்கள் அரசியல் பயணத்தில் இடையூறுகளை சந்திக்கின்றீர்களா?
2. திருமணம் மற்றும் திருமணத்தின் பின் வாழ்க்கையில் சவால்களை எதிர்கொள்கின்றீர்களா?
3. வயோதிப காலத்தில் பிள்ளைகளை பிரிந்து வாழ்கின்றீர்களா? மற்றும் உடல்நலகுறைவினால் அவதிப்படுகின்றீர்களா?
4. நீங்கள் கற்ற கல்விக்கான வேலைவாய்ப்பு கிடைக்கவில்லையா?
5. நீங்கள் முதலீடு செய்கின்ற விடயங்களில் முன்னேற்றம் கிடைக்கவில்லையா?
6. உங்கள் பிள்ளைகளின் கல்வி மற்றும் வெளிநாட்டுப் பயணங்களில் இடையூறா?
7. கடன் தொல்லைகளால் கஷ்டப்படுகின்றீர்களா?
8. மன நிம்மதியின்றி, தூக்கமின்றி தவிக்கின்றீர்களா?
9. குடும்பத்தில் தொடர்ச்சியாக துக்க செய்திகளால் கஷ்டப்படுகின்றீர்களா?
10. கண் திருஷ்ரியால் அவதிப்படுகின்றீர்களா?

இது போன்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிய **ஸ்ரீ சக்திவேல் ஜோதிட சேவையை** அணுகுங்கள்

நேரடியாகவோ அல்லது **What's app** இன் மூலமாகவோ எமது சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்



NO.28,
புதிய சிவன் கோவில் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 16

தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய வயாவிளான் மத்திய கல்லூரியின் காற்பந்தாட்ட அணியினரின் கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரியின் ஆ.சி. நடராசா மண்டபத்தில் அதிபர் வே.த.ஜெயந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-66)

## வேலையாட்கள் தேவை

கொழும்பு- வெள்ளவத்தையில் வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு 40 - 50 வயதிற்கு இடைப்பட்ட பெண் உதவியாளர் தேவை.

**077 734 0312**

(CS/56463) J-1

## ஏலவிற்பனை

**வளர்க்கக்கூடிய மாடு கன்றுகள் ஏலத்தில் விடப்படும்**

மேற்படி அகில.இ.கா.சே.சங்கத்திற்கு (காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையம்) சொந்தமான தேவைக்கு மேலதிகமாக காணப்படும் 3 பசு மாடுகள், 1 பசுக் கன்று (ஒரு வயது), 1 நாம்பன் கன்று (ஒரு வயது), 1 பசுக் கன்று (3 மாதம்) மொத்தமாக 06 மாடுகள் வருகின்ற 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 க்கு கோணாவில் காந்திக் கிராமத்தில் அமைந்துள்ள காந்தி சேவா சங்கத்திற்கு சொந்தமான காணியில் ஏலத்தில் விடப்படவுள்ளன. எனவே ஏலம் கோர விரும்பும் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

தகவல்
நிர்வாகம்,
அகில.இ.கா.சே.சங்கம்

## சனசமூக நிலையங்களுக்கு இடையிலான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 16

சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களை வலுப்படுத்தும் முகமாக சனசமூக நிலையங்களின் கடந்த கால மீளாய்வு எதிர்காலத் திட்டமிடல் மற்றும் சனசமூக நிலையங்கள் ஊடாக பிரதேச அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுதல் தொடர்பாக சனசமூக நிலையங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் உப அலுவலக ரீதியாக இடம்பெறவுள்ளது

கலந்துரையாடலுக்கு நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

சரசாலை உப அலுவலகத்துக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சரசாலை உப அலுவலகத்திலும்

கச்சாய் உப அலுவலகம் மற்றும் மிருசுவில் உப அலுவலகம் ஆகியவற்றுக்கான கலந்துரையாடல் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலும் கைதடி உப அலுவலகத்துக்கான கலந்துரையாடல் 23ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி பொது நூலகத்திலும் வரணி உப அலுவலகத்துக்கான கலந்துரையாடல் 25ஆம் திகதி வரணி உப அலுவலகத்திலும் நாவற்குழி உப அலுவலகத்துக்கான கலந்துரையாடல் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவற்குழி உப அலுவலகத்திலும் இடம்பெறவுள்ளது. (ஒ-159)

# மணிவிழா காணும் அம்மையை வாழ்த்துகின்றோம் நாம்




## திருமதி கலைவாணி நாதசொரூபன்

Best Wishes

Best Wishes

(BA, PGDE , SLTS - I

**சேவை விபரம்.**

- 01.09.1992 - 25.01.1996 - ஆசிரியர் - யா/யூனியன் கல்லூரி
- 26.01.1996 - 20.03.1998 - ஆசிரியர் - வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி
- 21.03.1998 - 09.02.2014 - ஆசிரியர் - யா/யூனியன் கல்லூரி
- 10.02.2014 - 15.10.2024 - பகுதித் தலைவர் யா/உடுவில் மான்ஸ் ம.வி

உலகெல்லாம் தமிழ் வாழ உயரிய சிந்தையோடு
உடுவில் மான்ஸ் ம.வி தன்னில் பதினொரு ஆண்டுகளாய்
தமிழ்மொழி அறிவு வளர்த்த திருமகளே!
எழுதாதவர்க்கும் எழுத்தறிவில் பின்னிற்போருக்கும் பின்னூட்டல்
சிமாட் போட்டில் சீரியலாய் நும்பணி
கலைக்கு வாணியாய் கலைவாணி நீர்
மொழிக்கு நாதமாய் நாதசொரூபன் நீர்
ஓய்வின்றி உழைத்த உமக்கு மனதளவில் ஓய்வில்லை
வயதளவில் தான் உமக்கு
மணிவிழா வாழ்த்துகின்றோம். இந் நாளில் ஓய்வு காலம் சிறப்புற!

**வாழ்த்துவோர்:**


**யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய ஆசிரிய நலன்புரிக் கழகமும்,**
**ஆசிரியரிடம் கற்ற ஏனைய பாடசாலை பழைய மாணவர்களும்.**

(CS/1627) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 06 . 1939



மறைவு
15 . 10 . 2024

## நாகலிங்கம் திருநாவுக்கரசு

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 10/2 சிவநகர், உருத்திரபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், இல 69, BA தம்பிலேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் திருநாவுக்கரசு நேற்று (15.10.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பறுபதம், செல்லமுத்து, சிவபாக்கியம் மற்றும் பொன்னம்மா, வள்ளிப்பிள்ளை, இலட்சுமன்னன் (ஓய்வுபெற்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர் - கரைச்சி), சுந்தரராஜா (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, ஆனந்தமூர்த்தி, வைத்தியலிங்கம், மகேஸ்வரி மற்றும் சாந்தலிங்கம், ஞானசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**69, B.A தம்பி லேன்**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**நா.இலட்சுமன்னன்**
**நா.சுந்தரராஜா**
**(சகோதரர்கள்)**

(CS/56464) J-1

# மரண அறிவித்தல்



## திருமதி சேனாதிராசா பூரணம்

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் . வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சேனாதிராசா பூரணம் அவர்கள் நேற்று (15.10.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் சின்னத்துரை - தங்கம் தம்பதியரின் அருமை மகளும், சின்னத்தம்பி - கனகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சேனாதிராசா அவர்களின் அன்பு மனைவியும், யசோதா, வனிதா, பகீரதன், புலந்திரன் (இந்திரன்), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சின்னம்மா, இரத்தினம், அன்னலட்சுமி, தருமலிங்கம், பஞ்சலிங்கம், கனகலிங்கம் மற்றும் மீனாட்சி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16.10.2024) புதன்கிழமை முற்பகல் 11.45 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**புலந்திரன் (இந்திரன்)**
**077 923 4535**

(CS/1628) J-1

# கராத்தேயில் வெண்கலம்!




கிளிநொச்சி, ஒக்.16

இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட தேசிய கராத்தேப் போட்டி கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை மூன்று நாள்கள் நடைபெற்றன.

இந்தப் போட்டியில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் விஜயராஜ் தமிழ்நிலவன், காட்டா போட்டியில் (கற்பனை வடிவிலான சண்டை) வடமாகாணத்தில் முதன்முறையாக வெண்கலப்பதக்கம் பெற்றார். (ரி-22)





150 ஆவது அஞ்சல் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை தபாலகத்தினரின் ஏற்பாட்டில், மாபெரும் இரத்த தான முகாம் காங்கேசன்துறை தபாலக அஞ்சல் அதிபர் திருமதி சுதாகரன் சசிகாலா தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்டது. (ச-25, 27)



# டெங்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக்.16

டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது டெங்கு நோய் தொடர்பான அறிமுகம், நோயின் தற்போதைய நிலைமை, நோய் வராமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், நோய் ஏற்பட்டால் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனால் விழிப்புணர்வுக் கருத்துரை வழங்கப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-25,27, 66)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 12.12.1950
மறைவு 15.10.2024

எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர்
திரு. பா.கஜேந்திரன் அவர்களின்
அன்புத் தாயார்

**அமரர் பாலசுப்பிரமணியம் தனபாக்கியம்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபை**
**ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்**
**உரும்பிராய்**

(CS 64460V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளக்காடான சஹாரா

சஹாரா பாலைவனத்தில் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் சஹாரா பாலைவனப் பகுதியில் வெள்ளம் ஏற்படுவது இதுவே முதல் முறை என்று தெரிவிக்கப்படுகின்றது.
சஹாரா பாலைவனம் உலகின் வறண்ட பாலைவனமாக அறியப்படுகிறது. அண்மையில் அங்கு பெய்த திடீர் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.
பாலைவனம் வெள்ளத்தால் நிரம்பிய காட்சிகள் கொண்ட ஒளிப்படங்களை நாஸா வெளியிட்டுள்ளது. (எ-இ)

# இஸ்ரேலின் சைபர் தாக்குதலால் முழுவதுமாக முடங்கியது ஈரான்



## வங்கிகள் உட்பட்ட பல துறைகளும் செயலிழப்பு

தெஹ்ரான், ஒக்.16

ஈரான் மீது இஸ்ரேல் மேற்கொண்ட சைபர் தாக்குதலால் ஈரான் அரசின் செயற்பாடுகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஈரானின் நாடாளுமன்றம் உள்ளிட்ட அரசதுறைகள் மீது இஸ்ரேல் பெரும் சைபர் தாக்குதலை நடத்தியுள்ளது என்றும், ஈரானின் முக்கியமான ஆவணங்கள், ஈரான் அணுசக்தி நிலையத்தின் ஆவணங்கள் என்பன திருடப்பட் டுள்ளன என்றும் கூறப்படுகின் றது. ஈரான் நாடாளுமன்றம், சட்டப்பேரவை, நீதித்துறை நிர்வா கங்களையும், அணுசக்தி, எரிசக்தி மற்றும் மின் விநியோகக் கட்டமைப்புகளையும் இலக்குவைத்து இஸ்ரேல் நடத்திய சைபர் தாக்குதலால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
சைபர் தாக்குதலால் ஈரான் முழுவதும் உள்ள வங்கிகள் மற்றும் தன்னியக்க பணப் பரிமாற்ற மையங்கள் முடங்கியுள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஈரானின் அனைத்து அரச துறைகள் மீதும் மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதல்களால் முக்கியமான ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன என்று ஈரான் சைபர் கவுன்சில் முன்னாள் செயலாளர் பெரோஸ்பாடி தெரிவித்துள்ளார். (எ-இ)

### உள்ளகப்...

வெளிவிவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான விஜித ஹேரத் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'நாட்டில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக புதிய ஆட்சியின்கீழ் சாதகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேர்தலுக்குப்பின்னர் எவ்வித தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை. தற்போதைய தேர்தல் காலப்பகுதியிலும் அதேபோன்றதொரு அமைதியான சூழ்நிலையை பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.
கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தேசியப் பொறிமுறை ஊடாக உரிய தலையீடுகள் மேற்கொள்ளப்படும். ஜெனிவாக் கூட்டத்தொடரிலும் இது தொடர்பில் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளோம்.
கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எமது நாட்டு அரசமைப்பு, குற்றவியல் சட்டம் உட்பட ஏனைய சட்டங்களுக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்ல எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.
இந்தநடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது, சில வேளைகளில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் பொறிமுறைகளின் உதவிகளும் பெறப்படும். ஆயினும் தேசியப் பொறிமுறை ஊடாகவே இறுதி நடவடிக்கை இடம்பெறும்'- என்றார். (அ-ம-44)

### ஆட்சியைக்...

தெரிவித்ததாவது:-
புலிகள் அமைப்பினர் ஆயுதம் ஏந்துவதற்கு முன்னர் ஆயுதம் ஏந்தியவர்கள் தான் ஜே.வி.பி.யினர். இரு தடவைகள் அவர்கள் கிளர்ச்சி செய்தனர். அதனால் தான் அரசியல்வாதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கநேரிட்டது. ஜே.வி.பி. யினரிடமிருந்து உயிரை பாதுகாத்துக் கொள்ளவே அன்று பொலிஸ் பாதுகாப்பைக் கோரினோம். இன்று எமக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. ஆனால் எதற்காக பொலிஸ் பாதுகாப்புப் பெறப்பட்டது என்ற வரலாற்றை மறக்கக்கூடாது.
தேர்தலுக்குப் பின்னர் நாட்டில் குழப்பம் இருக்கவில்லை. இதனை மதிக்கின்றோம். இப்படியே ஜனநாயக வழியில் ஜே.வி.பி. பயணிக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை. நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியை இலக்கு வைத்தே போட்டியிடுகின்றோம். 113க்கும் மேற்பட்ட ஆசனங்களை எதிர்பார்க்கின்றோம். நாட்டின் ஜனநாயகம் மற்றும் நாடாளுமன்ற முறைமையை பாதுகாக்க மக்கள் வாக்களிப்பார்கள் என நம்புகின்றோம். ஆயுத பலம் ஊடாக இரு தடவைகள் ஆட்சியைக் கைப்பற்ற முற்பட்டவர்களிடம்தான் தற்போது ஆட்சி ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, ஜனநாயகம் பற்றியும் மக்கள் சிந்திக்க வேண்டும்' - என்றார். (அ-ம-44)

### தாய்மாருடன்...

சாலைகள் ஊடகப் பேச்சாளரும், சிறைச்சாலைகள் ஆணையாளருமான காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
18 சிறுவர்களும், 23 சிறுமிகளுமென 41 சிறார்கள் அவர்களது தாய்மாருடன் சேர்த்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சிறுவர்களை பாடசாலைக்கோ மருத்துவப் பரிசோதனைக்கோ அனுப்பும்போது சிறைச்சாலை பஸ்களிலேயே அனுப்புகிறோம். சிறைச்சாலை பஸ்களில் இவர்களை அனுப்பும்போது வெளியே உள்ளவர்கள் இவர்கள் சிறையிலிருந்து வருவதை இலகுவாக அடையாளம் கண்டு கொள்கின்றனர். இதனால் இந்தச் சிறுவர்களுக்கு உளவியல் ரீதியாக பல்வேறு தாக்கங்கள் ஏற்படுகின்றன - என்றார்.
இந்த விடயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்னர் ஆய்வு முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், சிறைச்சாலைகளில் தாய்மாருடன் சேர்த்து தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் வன்முறையாளர்களாக மாறுவதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் அவர்களுக்கு உரிய கல்வி, மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதில்லை என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ம-6)

### மானிப்பாய்...

டுள்ளன. மேற்படி சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு நடந்துள்ளது.
வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பலொன்று வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் அங்கு நின்றிருந்த பெண்ணின் மோட்டார் சைக்கிளைத் தீ மூட்டியதுடன், முச்சக்கரவண்டி மற்றும் பட்டா வாகனம் என்பவற்றின் மீதும் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் அந்த வீட்டில் வசிக்கும் இளம்பெண்ணுக்கும், இளைஞன் ஒருவருக்கும் காதல் தொடர்பு இருந்ததாகவும், தற்போது இருவரும் முரண்பட்டுப் பிரிந்துள்ளமையால் காதலனே தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து தாக்குதல் சந்தேகநபரான இளைஞரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-ஒ-66-26-20)

### ரூ.8,000,000...

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

### ரயில்...

கட்டியெழுப்புவதற்காக இந்தியா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாறிருக்கையில், இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார பொறுப்பேற்றுள்ள நிலையில் அறிவிக்கப்பட்டுள்ள முதலாவது பெரும் இருதரப்புத் திட்டம் இதுவாகும்.
இராமேஸ்வரத்துக்கும், இலங்கைக்கும் இடையில் நெடுஞ்சாலையொன்றையும், ரயில் பாதையையும் அமைக்க வுள்ளோம் என பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார். இரு நாடுகளினதும் வர்த்தகர்கள் அதிகளவு கட்டணத்தைச் செலுத்தவேண்டியுள்ளதாலேயே இது குறித்துத் திட்டமிடப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர் ரயில் பாதையை அமைத்தால் இரு தரப்பினருக்கும் அது உதவியாக அமையக்கூடும் என்றும் மேலும் தெரிவித்தார். (அ-ஒ-இ)

### இலங்கை...

கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பங்காளித்துவம் வலுவாகப் பேணப்பட வேண்டும். இரு நாடுகளினதும் தலைவிதிகள் பின்னிப்பிணைந்தவை. இரு நாடுகளுக்கும் இடையிலான புவியியல், வரலாறு மற்றும் எதிர்காலம் என்பன பின்னிப் பிணைந்தவை. நாங்கள் இணைந்து வளரவேண்டும். செழிப்படைய வேண்டும். நாங்கள் வரலாறு, புவியியல் மற்றும் எதிர்காலத்தால் இயற்கையாகவே பிணைக்கப்பட்டிருக்கின்றோம். நாங்கள் ஈடுசெய்ய முடியாதவர்கள், இன்றியமையாதவர்கள் மற்றும் பிரிக்க முடியாதவர்கள் - என்றார். (அ-ம-இ)

### பொலிஸாரின்...

இன்னொருவரும் சந்தேகநபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

## காணி விற்பனைக்கு

நாவற்குழி பாலத்திற்கு அருகாமையில் A9 பிரதான வீதியில் இருந்து 300 m அண்மையில் 6 பரப்பு 11.15 குளி காணி விற்பனைக்கு உண்டு. இடைத்தரகர்கள் இன்றி நேரடி விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:
076 532 2659

காலையடி மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது. (ச)





# வாணிவிழா

கொடிகாமம், ஒக்.16

போக்கட்டி அ.த.க. பாடசாலையின் வாணிவிழா அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரும், சைவப்புலவருமாகிய சி.கா.கமலநாதன் கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர் க.கோபிகா, ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களது கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் நவராத்திரி விழாவையொட்டி நடத்தப்பட்ட பண்ணிசை, பொதுஅறிவு வினாவிடைப்போட்டி, கோலம்போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் மற்றும் தேவாரம் இசைத்தல் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(ரி-159)

## அமெரிக்கா லொத்தர் விசா - 2026

2026 ஆம் ஆண்டுக்கான அமெரிக்கா லொத்தர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S.Road, Jaffna.
077 755 4528

## மணமகள் தேவை

யாழ் இந்து குருகுலம் 1994 இல் பிறந்த சித்திரை நட்சத்திரம் கன்னி இராசி அரச வேலைபார்க்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(CS/56454) J-1

076 804 4898

IELTS - 19.10.2024 New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
Student Visa மற்றும் Work Visa (Auxiliary Nurse) ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்
By: B.MURALI- 077 798 9830

# இஸ்ரேலின் தாக்குதலில் காஸாவில் 30 பேர் சாவு

ஜெருசலேம், ஒக்.16

வடக்கு காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, தெற்கு லெபனானில் இஸ்ரேலியப் படைகள் ஐக்கிய நாடுகளின் அமைதி படையினர் மீது மேற்கொண்ட தாக்குதல்களுக்கு உலகத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

லெபனானின் நகோரா தலைமையகத்தில் உள்ள ஐ.நா. இடைக்காலப் படை மற்றும் அருகிலுள்ள தளங்கள் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இடைக்கால அமைதிப் படையினராகப் பணியாற்றும் இலங்கையர்கள் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ஏ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1944

மறைவு 15 . 10 . 2024



### கந்தையா கனகலிங்கம்

**(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்)**

நீராவியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தம்மளை, சங்குவேலி வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகலிங்கம் அவர்கள் நேற்று (15.10.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமணி அவர்களின் அன்புக் கணவரும், சுதாகர் (இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில்), நேதானந்தன் (பிரதேச செயலகம், உடுவில்), தயகோபி (பிரதேச செயலகம், மாந்தை கிழக்கு), தனுஜா (தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்மிளா, சுஜாதா (இலங்கை வங்கி - வெள்ளவத்தை), பாதினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கோடீஸ்வரன் (இலங்கை வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, தங்கரத்தினம் மற்றும் மகேந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற துரைசிங்கம், குலசேகரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நவீன்சன், நேத்ரா, கேஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2024) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 635 4177, 071 869 7735, 077 105 8151

தம்மளை, சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(CS/56465) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 11 . 1949

மறைவு 15 . 10 . 2024



### நாகராசா பாலசரஸ்வதி

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா பாலசரஸ்வதி அவர்கள் நேற்று (15.10.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஞானம் அவர்களின் அன்புச் சகோதரியும், ஜெயக்குமார் (கனடா), நாகநந்தினி, நகுலன், கிருஷ்ணகுமார் (கனடா), காலஞ்சென்ற பிரதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலினி (கனடா), தர்சனா, உஷானி, காலஞ்சென்ற அருணாசலம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனீசன் (கனடா), சனோசன் (கனடா), தர்சிகா (HNB Bank உப்புவெளி), தனுஜா (விவசாய அமைச்சு, வ.மா), சயந்தன் (கனடா), சஞ்சீவா (Seylan Bank - திருகோணமலை), ஜேனுசன், கர்சனன், ஜதுர்ஷிகா, பிரணவி, விஷ்வா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கவிநாத், றயன், ஹஷ்மினா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
077 406 9835

(CS/56459) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.